பலசரக்கு!

- முதல்வர் கலைஞர்

பல சரக்கு!

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

வெளியீடு :
திராவிட முன்னேற்றக் கழகம்
"அண்ணா அறிவாலயம்"
367 & 369, அண்ணா சாலை
சென்னை – 600 018.

37922
ஓ328.541
தருணா

முதற் பதிப்பு : ஜூன் 2008

விலை : ரூ. 10/-

அச்சிட்டோர் : மாருதி பிரஸ்
196, பீட்டர்ஸ் சாலை
சென்னை - 600 014.

பேராசிரிய
ஆய்வக நூ
நிலையம்
சென்னை-

கர்நாடகத்தில் நடைபெற்றுவரும் சம்பவங்கள் குறித்து சட்டப் பேரவையில் முதல்வர் கலைஞர் கொண்டுவந்த தீர்மானம்

கர்நாடகத்தில் நடைபெற்று வரும் சம்பவங்கள் குறித்து முதல்வர் கலைஞர் அவர்கள் சட்டப் பேரவையில் 1.4.2008 அன்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இந்தத் தீர்மானம் அனைத்துக் கட்சிகளின் சார்பில் ஒருமனதாக நிறைவேறியது.

தீர்மானத்தைக் கொண்டு வந்த முதல்வர் கலைஞர் அவர்கள் "கர்நாடகத்திலே உள்ள வெறியர்கள் சிலர் தமிழர்க்கும், தமிழ் உணர்வுக்கும் தமிழர் நலனுக்கும் விரோதமாக நடந்து கொள்ளும் போக்கினை பேரவை வன்மையாகக் கண்டிப்பதுடன் நாட்டின் ஒற்றுமை – ஒருமைப்பாட்டினைக் காத்திடும் பொறுப்பினை உடனடியாக மத்திய அரசு நிறைவேற்றிட வேண்டும்" என்றும் கூறினார்.

சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரம் முடிந்ததும் ஒகேனக்கல் பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் அனைத்துக் கட்சிகளின் சார்பில் கொண்டு வரப்பட்டது.

இதனை சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் என்ற முறையில் எடுத்துக் கொண்டு இது குறித்து கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் அரசின் கவனத்திற்கு கொண்டு வரலாம் என்று பேரவைத் தலைவர் ஆவுடையப்பன் கூறினார்.

இதனையடுத்து ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு கர்நாடகாவைச் சேர்ந்த சில அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்திருப்பதைக் கண்டித்து கொண்டு வரப்பட்ட இத்தீர்மானத்தின் மீது ஓ.பன்னீர் செல்வம் (அ.தி.மு.க.), சி.ஞானசேகரன் (காங்கிரஸ்), கோ.க.மணி (பா.ம.க.), கோவிந்தசாமி (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்), வை.சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்), ராமகிருஷ்ணன் (ம.தி.மு.க.), கு.செல்வப்பெருந்தகை (விடுதலைச் சிறுத்தைகள்), விஜயகாந்த் (தே.மு.தி.க.) ஆகியோர் பேசினர்.

அப்போது ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை எதிர்த்து வரும் கர்நாடகாவைச் சேர்ந்த சில அமைப்புகளைக் கண்டித்தும் இந்தப் பிரச்சினைக்கு மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியும் முதல்வர் கலைஞர் அவர்கள் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முழு ஆதரவு அளிப்போம் என்றும் பேசினர்.

இதையடுத்து பொதுப் பணித்துறை அமைச்சர் துரைமுருகன் பேசினார்.

நிறைவாக இப்பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி முதல்வர் கலைஞர் அவர்கள், பேரவையில் ஏற்கனவே ஒகேனக்கல் பிரச்சினை குறித்து நிறைவேற்றிய தீர்மானத்துடன் மேலும் சில வாசகங்களை இணைத்து தீர்மானமாகக் கொண்டு வந்து உரையாற்றினார். இதையடுத்து அத்தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் ஒருமனதாக நிறைவேறியது.

தீர்மானம் கொண்டு வந்து முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

பேரவைத்தலைவர் அவர்களே, கடந்த 27.3.2008 அன்று இந்த மாமன்றத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கட்சி வேறுபாடின்றி ஒருமித்த கருத்தோடு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அந்தத் தீர்மானத்தினுடைய விளைவு என்ன என்பதை நாம் முழுமையாக அறிந்து கொள்வதற்கு முன்பே மீண்டும் நம் அனைவருடைய சார்பில் இந்த மாமன்றத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டிய நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிறோம், அல்லது அவசியத்திற்கு ஆளாகியிருக்கிறோம்.

நமக்கும் கர்நாடக மாநிலத்திலே உள்ள சில மொழி வெறியர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள இந்த கசப்பு கூட ஒரு வகையிலே நாம் வரவேற்கத்தக்கக் கசப்பாகத்தான் இருக்கிறது. ஏனென்றால் இந்த மாமன்றத்தில் இன்று ஒரு நாள்தான் எல்லோரும் (கைதட்டல்) ஒரே கருத்தில் ஒரு தீர்மானத்தை முன் மொழிந்தும் வழி மொழிந்தும் அதை மொத்தமாக நான் இங்கே முடிவுரையாற்றி, வரவேற்று, சொல்லப்பட்ட கருத்துக்களையெல்லாம் ஒரு தீர்மான வடிவிலே கொண்டு வருவதற்கு வழிவகுத்த நிகழ்ச்சியாக அமைந்துள்ளது.

இரண்டு நாட்கள் கர்நாடக மாநிலத்தில் நடைபெற்று வருகின்ற நிகழ்ச்சிகள் எத்தகையது? எப்போதும் தமிழ் என்றால், தமிழ்நாடு என்றால், தமிழ்

மக்கள் என்றால் அது என்ன காரணமோ எனக்குத் தெரியவில்லை. கர்நாடக மாநிலத்திலே உள்ள ஒரு சில மொழி வெறியர்களுக்கு அது அறவே பிடிப்பதில்லை. ஆங்கிலத்தில் "அலர்ஜி" என்பார்களே, அப்படி ஒரு "அலர்ஜி" – "ஒவ்வாமை" அவர்களுக்கு ஏற்பட்டு நம்மை வெறுப்பதையே தொழிலாக – அவர்களுடைய வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள். அது நீக்கப்படாமல், நீங்காமல் இந்தியாவின் ஒருமைப்பாடு, இறையாண்மை என்பதெல்லாம் வெறும் வாய்மொழியாகத்தான் இருக்குமே யல்லாமல், வாய்மை நிறைந்ததாக இருக்க முடியாது. எடுத்துக்காட்டாக – சான்றாகச் சொல்ல வேண்டுமேயானால், உலகம் போற்றும் உத்தம ஞானி, தமிழர்களுக்கு குறளைத் தந்த எம்மான் அய்யன் வள்ளுவருக்கு கர்நாடக மாநிலத்திலே மதிப்பு உண்டா என்றால் இல்லை. நீங்கள் மறந்திருக்க முடியாது. இந்த நேரத்தில் நான் நினைவூட்டுவது யாரிடத்திலே நாம் நம்முடைய கருத்து வேறுபாடுகளைச் சொல்லி, அவர்களை ஒற்றுமைப்படுத்த வேண்டியிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதற்காகத்தான் நினைவூட்டுகிறேன்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, பெங்களூர் தமிழ்ச் சங்கத்தின் வாயிற் புறத்திலே வைக்கப்பட்ட அய்யன் வள்ளுவருடைய சிலை, துணி கொண்டு மூடப்பட்டு அதைத் திறக்கவே கூடாது என்று அங்குள்ள வெறியர்கள் அதைத் தடுத்து நிறுத்தியிருப்பதும், அதன் காரணமாக அந்தச் சிலை திறக்கப்படாமலே இருப்பதும் எல்லோரும் அறிந்த ஒன்று. ஏறத்தாழ பத்தாண்டு காலத்திற்கு மேலாகிறது. என்னைப் பெங்களூரிலே சில

நிகழ்ச்சிகளுக்கு நண்பர்கள் அழைத்தபோது, நான் சொன்ன வாசகம், என்றைக்கு திருவள்ளுவருடைய சிலை இங்கே விழா நடத்தி திறந்து வைக்கப்படுகிறதோ, அன்றைக்கு மறுநாள் தான் நான் பெங்களூரில் நிகழ்ச்சிக்கு வருவேன் என்று கூறி, அன்று முதல் பெங்களூர் நிகழ்ச்சிகளுக்குச் செல்வதையே நிறுத்தி விட்டேன்.

அப்படியொரு சூளுரையை மேற்கொள்ள வேண்டிய அளவிற்கு எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட, எல்லா தரப்பு மக்களாலும் போற்றப் பட்ட எல்லா சமயத்தினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு மகான் – ஒரு மாமேதை – தமிழர்களின் வழிகாட்டி வள்ளுவருக்கே அங்கே அந்த கதி. அதை நாம் போக்க முடியாமல், தவித்துக் கொண்டிருக்கின்ற இந்தக் கால கட்டத்தில் தண்ணீரும் கிடையாது, பயிர் பச்சைகளுக்கு தண்ணீர் கிடையாது என்று சொன்னவர்கள், உயிர் காப்பதற்கும் தண்ணீர் கிடையாது என்று இன்றைக்குச் சொல்கின்ற அளவிற்கு ஒகனேக்கல் பிரச்சினையை கையிலே எடுத்துக் கொண்டிருக் கிறார்கள்.

நான் இதைப்பற்றி நம்முடைய அமைச்சர் துரைமுருகன் விரிவாக பேசி விட்ட காரணத்தால் மேலும் உங்களுக்கு விரிவோ, விளக்கமோ தர வேண்டுமென்று கருதவில்லை. எல்லோரும் அதை நன்கு புரிந்து வைத்திருக்கிறீர்கள். ஆகவே இங்கே தரப்படுகின்ற விளக்கம், அவைக் குறிப்பிலே ஏறி, அது அகில இந்திய அளவிலே மக்களிடத்திலே பரப்பப்பட வேண்டுமென்பதற் காகத்தானே தவிர உங்களுக்காக அல்ல.

நாம் 27.3.2008இல் – இந்த அவையில் நிறைவேற்றிய தீர்மானத்தின் – இறுதி வாசகங்களை மாத்திரம் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

"தமிழகம் எப்போதுமே தனது அண்டை மாநிலங்களுடனும், அந்த மாநிலங்களின் மக்களுடனும் நட்பையும், நல்லுறவையும் பேணி வளர்த்து வருகிறது. எனவே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற மத்திய அரசு முழு ஒத்துழைப்பையும், உதவியையும் தமிழக அரசிற்கு வழங்க வேண்டுமென்றும், கர்நாடக அரசு கடைப்பிடித்து வரும் எதிர்ப்புப் போக்கினைத் தடுத்து நிறுத்திட; ஆவன அனைத்தும் செய்திட் வேண்டுமென்றும் இந்தப் பேரவை மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது" என்ற தெளிவு நிறைந்த தீர்மானத்தினுடைய வாசகம் முடிவுரையாக இருந்தது.

இன்றைக்கு அதோடு, இன்னும் சில வாசகங்களை அமைத்து, அதாவது, "அமைதி காக்கும் நோக்குடனும், மாநிலங்களுக்கிடையே ஒற்றுமை காண வேண்டிய தன்மையுடனும் – இந்த அவையில் அந்தத் தீர்மானத்தை நாம் நிறைவேற்றி யிருக்கும்போது, அந்தத் தீர்மானத்திற்கு எதிராக கர்நாடகத்திலே உள்ள வெறியர்கள் சிலர் தமிழர்க்கும், தமிழ் உணர்வுக்கும், தமிழக மக்களுடைய நலன்களுக்கும் விரோதமாக நடந்து கொள்ளும் போக்கினையும், நடத்தும் கலவரங் களையும் இந்தச் சட்டமன்றம் வன்மையாகக் கண்டிக்கின்றது" என்பதுடன், "இந்தியாவின் இறையாண்மை, ஒருமைப்பாடு

இவற்றைக் காத்திடும் பொறுப்பும் மத்திய அரசுக்கு இருக்கின்ற காரணத்தால் அந்தப் பொறுப்பை உடனடியாக நிறைவேற்ற முன் வந்து தமிழக மக்களின் உரிமைகளை காத்திட முன் வர வேண்டும் என்று மத்திய அரசை இந்த மாமன்றம் இந்தத் தீர்மானத்தின் மூலமாக வலியுறுத்துகிறது" (பலத்த கைதட்டல்)

இதை ஒரு மனதாக நீங்கள் நிறைவேற்றித் தந்தமைக்கு மாமன்றத்தின் சார்பில் – தமிழக அரசின் சார்பில் – தனிப்பட்ட முறையிலே என் சார்பில் – உங்கள் அத்தனை பேருடைய சார்பில் நம்முடைய நன்றியையெல்லாம் காணிக்கையாக்கி இந்த அளவில் இந்தப் பிரச்சினையை இன்றைக்கு நிறுத்து கிறோம், இனி என்ன நடக்கிறது என்பதைப் பார்த்து, அணிவகுப்பது, பணி முடிப்பது என்பதைப் பற்றி பிறகு அனைத்துக் கட்சிகளின் சார்பிலே கலந்தாலோசித்து முடிவு செய்வோம் என அறிவித்து அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

27 சதவிகித இடஒதுக்கீடு சட்டத்திற்கு முன் முயற்சி எடுத்து வெற்றியைத் தேடித்தந்த முதல்வர் கலைஞருக்கு சட்டப்பேரவையில் நன்றி – பாராட்டு தீர்மானம்

மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கு இருந்த தடையை அகற்ற ஈடுஇணையிலா பங்களிப்பை நல்கிய, அச்சட்டத் திற்கு முன்முயற்சி எடுத்து வெற்றியைத் தேடித் தந்த முதல்வர் கலைஞர் அவர்களுக்கு சட்டப்பேரவையில் 11.4.2008 அன்று அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களும் நன்றியும் பாராட்டும் தெரிவித்து தீர்மானம் கொண்டுவந்து, அதன் மீதான விவாதத்தில் முதல்வருக்குப் புகழாரம் சூட்டினார்கள்.

அனைத்துக் கட்சியினரின் பேராதரவோடு அத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. தமது குருதியோட்டத்துடன் இரண்டறக் கலந்திட்ட இட ஒதுக்கீட்டுக் கொள்கை குறித்து தமிழினத் தலைவர் – முதல்வர் கலைஞர் அவர்கள் இவ்விவாதத்தில் உணர்ச்சியுரை நிகழ்த்தினார்.

அதுபோது, "சமூக நீதிப் போராட்டம் முற்றுப் பெற்று விடவில்லை – தொடரும்!" என இட ஒதுக்கீடு குறித்த பன்னெடுங்கால வரலாற்றைச் சுட்டிக்காட்டி சூளுரைத்தார்.

தமிழக சட்டப்பேரவையில் கேள்வி நேரம் முடிவுற்றதும் பா.ம.க. உறுப்பினர் கோ.க.மணி எழுந்து, இடஒதுக்கீடு சம்மந்தமாக உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை வரவேற்றும் அதற்காகப் பாடுபட்ட முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார்.

இந்தத் தீர்மானத்தை காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத் தலைவர் சுதர்சனம் வழிமொழிந்தார்.

இந்தத் தீர்மானத்தின் மீது மார்க்சிஸ்ட் உறுப்பினர் கோவிந்தசாமி, இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர் சிவபுண்ணியம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உறுப்பினர் செல்வம், ம.தி.மு.க. உறுப்பினர் கண்ணப்பன் ஆகியோர் பேசினர். பேரவைத் தலைவரும் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு பேரவையின் சார்பில் நன்றி தெரிவித்துப் பேசினார். இத்தீர்மானத்தின் மீது உரையாற்றி அமைந்ததும் கோ.க.மணி கொணர்ந்த தீர்மானம் குரல் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. அதனையடுத்து இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

இத்தீர்மானத்தில் முதல்வர் கலைஞர் அவர்கள் பேசியதாவது:–

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டப்பேரவையினுடைய தலைவர் கோ.க.மணி அவர்கள் முன்மொழிந்து, சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் சுதர்சனம் அவர்களால் வழிமொழியப்பட்ட இந்தத்

தீர்மானத்தின் மீது சில கருத்துக்களை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

சமூகநீதிக்கான பயணம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் நீதிக்கட்சி காலத்திலே அன்றைய அமைச்சர் முத்தையா அவர்களுடைய காலத்திலேயிருந்து தொடங்கி இன்றளவும் ஒரு நூற்றாண்டு காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

1920ஆம் ஆண்டுக்குப் பிறகு, முதல் கம்யூனல் ஜி.ஓ. எனத் தொடங்கி இட ஒதுக்கீடு மத்திய அரசு கல்வி நிலையங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகித இடஒதுக்கீட்டிற்கான தனிச்சட்டம் 2007ஆம் ஆண்டில் மத்திய அரசால் நிறைவேற்றப் பட்ட வரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

தமிழ்நாட்டில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர் ஆகியோர் இணைந்து கொடுத்த அழுத்தம் காரணமாக பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களும் இந்திய அரசியல் சட்டத்தில் இடஒதுக்கீட்டிற்கென முதல் திருத்தத்தை செய்திட முன்வந்தார்கள் என்பதை நாம் மறந்து விட முடியாது (மேசையைத் தட்டும் ஒலி). அன்று தொடங்கி இந்திய அரசியல் சட்டத்தில் 93வது திருத்தம் வரை இடஒதுக்கீட்டுப் பயணம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அகில இந்திய அளவில் இட ஒதுக்கீட்டிற்கான முதல் கதவு 1990ஆம் ஆண்டில் அன்றைய பிரதமர் வி.பி.சிங் அவர்களால் திறந்து வைக்கப்பட்டதை யாரும்

மறந்துவிட இயலாது. அதன் காரணமாக மத்திய அரசுப் பணிகளிலே இடஒதுக்கீடு கிடைத்தது. அப்பொழுது வட புலத்திலே நடைபெற்ற வன்முறை, மாணவர்களை தீக்குளிக்கச் செய்கின்ற அளவிற்கு நடைபெற்ற காட்டுமிராண்டித் தனமான எதிர்ப்புகள் இவைகளையெல்லாம் மீறி இன்றைக்கு சமூகநீதி வெற்றி பெற்றிருக்கின்றது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கொண்டு வந்து, உச்சநீதிமன்றத்தால் தடுக்கப்பட்டு, நம்மைப் போன்றவர்கள் நடத்திய – கொடுத்த போர்க் குரல் காரணமாக இன்றைக்கு சமூகநீதி நிலைநிறுத்தப்பட்டு 27 சதவிகித இடஒதுக்கீட்டுச் சட்டத்தின் வாயிலாக மத்திய கல்வி நிலையங்களில் இடஒதுக்கீடு கிடைத்துள்ளது. அது பற்றி நான் மத்திய மனித வளத் துறை அமைச்சர் மாண்புமிகு அர்ஜுன் சிங் அவர்களிடத்தில் தொடர்பு கொண்ட போது இதைப் பற்றி இன்னும் விரிவாக – குறிப்பாக சுட்டிக்காட்டப்படுகிற – இங்கே கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நண்பர்கள் எடுத்துக் காட்டியதைப் போல "கிரீமி லேயர்" பற்றி அமைச்சரவையிலே யோசிக்க இருக்கிறோம் என்று அவர் கூறியிருப்பது ஆறுதல் தரக் கூடிய ஒரு செய்தியாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதற்குப் பெயரே "கிரீமிலேயர்" – "கிருமி" அதிலே இருக்க வேண்டாம் என்பதுதான் நம்முடைய வாதம். அதை அவர்கள் விலக்கிக் கொள்கின்ற அளவிற்கு மத்திய அமைச்சரவை யோசித்து முடிவெடுக்கும். நம்முடைய போராட்டத்தினுடைய தொடர்ச்சியாக சமூகநீதி என்பது முற்றுப் பெற்றுவிட்ட ஒரு போராட்டம் அல்ல. இன்னும்

முழுமையடைய வேண்டிய நிலை நிறைய பாக்கி இருக்கிறது. அதை நாம் நிறைவேற்றியாக வேண்டும். இந்தப் போராட்டத்தில் நாம் கொடுத்த குரலில் – இந்த அவையிலே எழுப்பிய அந்தக் குரலுக்கு அன்றைக்கும் சரி இன்றைக்கும் சரி ஆதரவாக நம்முடைய காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகள், பாட்டாளி மக்கள் கட்சி, மற்றுமுள்ள விடுதலைச் சிறுத்தைகள், வெளியிலே சொல்லாவிட்டாலும் அ.தி.மு.க., ம.தி.மு.க. ஆகிய இந்தக் கட்சிகளுக்கெல்லாம் இது உடன்பாடானது தான் என்பதை நான் அறிவேன். அவர்கள் பேச வேண்டும் பேச வேண்டும் என்று சுதர்சனம் அவர்களைப் பார்த்து கேட்டுக் கொண்டார். மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என்று அதை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (அப்போது ம.தி.மு.க. உறுப்பினர் கண்ணப்பன் எழுந்து இட ஒதுக்கீடு குறித்து ஆதரவு தெரிவித்துப் பேசினார்.)

நண்பர் கண்ணப்பன் அவர்கள் காலதாமதமாக வந்து காலதாமதமாகவாவது இந்த ஒத்துழைப்பைத் தந்ததற்கு நான் நன்றி கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசினார்.

தொலைபேசி உரையாடல் ஒட்டுக் கேட்பு : உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி விசாரணை நடத்துவார்!

சட்டப்பேரவையில் முதல்வர் கலைஞர் அறிவிப்பு

தலைமைச் செயலாளர் நிர்வாகப் பணி குறித்து தன்னுடைய சக அதிகாரி அல்லது துணை அதிகாரிக்கு யோசனை சொன்னதை 'டேப்' செய்து அதை பத்திரிகையிலே வெளியிடுவ தென்பது வியாபாரத்திற்கு நல்லதே தவிர ஏதோ ஒரு பெரிய இரகசியத்தை வெளியிட்டு விட்டார்கள் என்பதல்ல. எனினும் இப்பிரச் சினைக் குறித்து உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி விசாரணை நடத்துவார் என்று சட்டப் பேரவையில் முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவை 15.4.2008 அன்று காலை கூடியதும் அ.தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், ம.தி.மு.க. உறுப்பினர்கள் ஆங்கில பத்திரிகை ஒன்றில் வெளியான ஒட்டுக்கேட்பு செய்தி குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருப்பதாகவும் இதுகுறித்து விவாதிக்க வேண்டுமென்றும் கூறினர்.

இதற்கு பதிலளித்து முதல்வர் கலைஞர் அவர்கள் கூறியதாவது:–

தரப்பட்ட சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் என்பதின் தலைப்பாக "தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயரதிகாரிகளின் தொலைபேசி உரையாடல்களை தமிழகப் புலனாய்வுத் துறை கண்காணித்து ஒட்டுக்

கேட்பதாக வெளி வந்த தகவல் குறித்து" என்று பொதுவாகத்தான் நம்முடைய முன்னாள் முதலமைச்சர் பன்னீர் செல்வம் அவர்களும் மற்ற அ.தி.மு.க. உறுப்பினர்களும், அது போலவே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலும், பா.ம.க. சார்பிலும் கேட்டிருக்கிறார்கள் – அதைப் பற்றி விளக்கம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். ஆனால், சர்ச்சை என்னவென்றால், ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் வந்த செய்தியினுடைய விரிவாக்கத்தின் காரணத்தால் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டிருக்கின்றது. இந்த அவைக்கும் தெரியும். இந்தக் குறிப்பைத் தந்த – இது பற்றி விவரம் தேவையென்று கேட்ட – மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நன்கு தெரியும். அப்படி ஒரு பத்திரிகையை அவர்கள் குறிப்பிட்டு, அதிலே வந்திருப்பது தவறு அல்லது சரி என்று வாதிப்பார்களேயானால், அதைப்பற்றி அரசு தன்னுடைய விளக்கத்தைத் தரக் கடமைப்பட்டிருக்கிறது.

கோ.க. மணி (பா.ம.க.) :– தொலைபேசி ஒட்டுக் கேட்பதைப் பற்றி முதலமைச்சர் இங்கே விளக்கமளித்திருக்கிறார்கள். இந்த அவையில் ஏற்கனவே ஒரு முறை என்னால் கிளப்பப்பட்டு அப்போது முதலமைச்சர் அவர்கள் தொலைபேசி ஒட்டுக்கேட்பது அரசாங்கத்தால் நடைபெறவில்லை, ஏதோ ஒரு ஆங்கில இதழில் வந்த செய்தியை வைத்து நீங்கள் பேசக் கூடாது என்று மறுப்பு தெரிவித்தார்கள். (அ.தி.மு.க உறுப்பினர்கள் அனைவரும் நின்று கொண்டே குழப்பம் விளைவித்துக் கொண்டி ருந்தார்கள்) மாண்புமிகு முதலமைச்சர் சொன்னதை

நாங்களும் ஏற்றுக் கொண்டு, முதல் அமைச்சர் சொன்னதிலே நியாயம் இருக்குமென்று அமைதி காத்தோம். ஆனால் அதே பிரச்சினை மீண்டும் இப்போது கிளப்பப்பட்டிருக்கிறது. அரசியல் கட்சித் தலைவர்களின் தொலைபேசிகள் மருத்துவர் அய்யாவின் தொலைபேசி, என்னுடைய தொலைபேசி என்று பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களின் தொலைபேசிகள் எல்லாம் ..... (அ.தி.மு.க. உறுப்பினர்கள் நின்று கொண்டே தொடர்ந்து குரலெழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்)

பேரவைத் தலைவர் :– அ.தி.மு.க. உறுப்பினர்கள் அமர வேண்டும். முதலமைச்சர் விளக்கம் அளித்த பிறகு பா.ம.க. தலைவர் பேசுகிறார். அவர் சொல்வதை முதலமைச்சர் கேட்கிறார். அவர் பேசி முடித்த பிறகு நீங்கள் பேசுங்கள்.

கோ. க. மணி :– அரசியல் கட்சிகளின் தலைவர்களை மட்டுமல்ல, இந்த நாட்டின் தலைமைச் செயலாளரின் தொலைபேசியை ஒட்டுக் கேட்பது என்பது மிக முக்கியமானது. இது வருத்தமளிக்கும் செய்தி. அந்தப் பத்திரிகையாளர்கள் தங்களிடம் ஆதாரம் இருப்பதாகச் சொல்கிறார்கள். (அ.தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து நின்று கொண்டே கூச்சல் எழுப்புதல்)

முதலமைச்சர் கலைஞர் :– எதிர்க் கட்சி உறுப்பினர்கள் எதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள்? அவர்கள் என்ன விரும்புகிறார்கள்? என்று கூறினால், அதற்கு விளக்கமளிக்கத் தயாராக இருக்கிறோம். நீங்கள் ஆளுங்கட்சியிடமிருந்து – அரசாங்கத்திடமிருந்து

பிரதான எதிர்க்கட்சியினர் என்ன விளக்கம் பெற விரும்புகிறீர்கள் ?

அவை முன்னவர் பேராசிரியர் :– முதலமைச்சர் அவர்கள் இங்கே உரை யாற்றும்போது – எதிர்க்கட்சியினர் எழுப்பிய பிரச்சினைகளுக்கு முதல் அமைச்சர் விளக்கம் தருகிறார். முதலமைச்சர் பேசும்போதே அதற்கு அனு மதிக்காமல் அ.தி.மு.க.வினர் எழுந்து நிற்பதாக இருந்தால் தவறு, வெளி நடப்புச் செய்யவேண்டுமென்று திட்டமிட்டிருந்தால் அதைச் செய்வது நல்லது.

(அ.தி.மு.க. வினர் தொடர்ந்து நின்று கொண்டே ஒலி எழுப்புதல்)

பேரவைத் தலைவர் :– இப்படியே நீங்கள் நின்று கொண்டேயிருந்தால் வெளியேற்ற வேண்டிய நிலைமை ஏற்படும்.

முதலமைச்சர் :– நீங்கள் கூறுவதற்கு உங்களுக்கு பரிகாரம் தேவை இல்லையா ? நான் கூற வேண்டாமா ?

(அ.தி.மு.க. வினர் குரல் எழுப்பிக் கொண்டே நின்று கொண்டிருந்து விட்டு, பிறகே அவர்களே கோஷமிட்டுக் கொண்டு வெளி நடப்புச் செய்கிறார்கள்.)

முதலமைச்சர் கலைஞர் :– ஒரு பிரச்சினையை எழுப்பி பன்னீர்செல்வம் பேசியிருக்கிறார். நான் எழுந்து அதற்கு விளக்கம் சொல்வதற்குள்ளாக, கூச்சல் போட்டுக் கொண்டு வெளியேறினால் அந்த விளக்கம் அவர்களுக்கு போதுமானதாக இல்லை என்று அர்த்தமல்ல. அந்த

விளக்கம் கிடைத்தால், உண்மைகள் வெளியாகும் என்ற காரணத்தினால் அவர்கள் கூச்சல் போட்டுக் கொண்டு வெளியேறியதாகத் தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். இதைப் போல ஒரு செய்தி – இதே ஆங்கிலப் பத்திரிகையில் தான் – முன்பொரு முறை வெளிவந்து, நண்பர் கோ.க. மணி அவர்கள் அது குறித்து பிரச்சினையெழுப்பி, இங்கே அதற்கு விளக்கமளிக்கப்பட்டது. மீண்டும் அதே பத்திரிகையில் இப்போது ஒரு செய்தி வந்திருக்கிறது. அப்படி வந்த செய்தி உண்மையா அல்லவா என்பதை விட வாதத்திற்காகச் சொல் கிறேன் – உண்மை என்றே வைத்துக் கொண்டாலும், தலைமைச் செயலாளர் இன்னொரு அதிகாரியுடன் ஒரு வழக்கு குறித்துப் பேசிய உரையாடல், அந்தப் பத்திரிகையிலே வெளிவந்திருப்பது உண்மையென்று வைத்துக் கொண்டாலும், அதிலே என்ன தவறு – பேசியதிலே என்பதை நாம் பார்க்க வேண்டும். தேசிய நலனுக்கு விரோதமானதா? அல்லது சட்டப்படி குற்றம் ஆனதா? அல்லது வேண்டுமென்றே எதிர்க்கட்சிகளின் உரிமைகளை நசுக்குவதற்காக திட்டமிட்டு ஏதோ ஒரு வழக்கு போடுவது சம்மந்தமாக இருவரும் பேசிக் கொண்டதா என்றால் அப்படியொன்றும் இல்லை. சட்ட விரோதமானதாக அல்லது நாம் போற்றிப் பாதுகாக்கின்ற நெறிமுறைகளுக்கு விரோதமானதாக – நீதிக்கு விரோதமானதாக எதுவும் அந்த உரையாடலிலே இல்லை. ஆனால் தலைமைச் செயலாளரின் போன் "டேப்" செய்யப்படுகிறது என்ற முறையிலே ஒரு செய்தியை வெளியிட அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இந்தக் காலத்தில் விஞ்ஞானத்தின் வேகமான வளர்ச்சியில்

யார் வேண்டுமானாலும் – எந்தப் போனில் வேண்டுமானாலும் "டேப்" செய்ய முடியுமென்ற நிலை இருக்கிறது. செல்–போனைக் கூட டேப் செய்கின்ற முறை வந்திருக்கின்றது.

இன்றைக்குக் கூட "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகையில் டேப் செய்வது எவ்வளவு சுலபம் – ஒரு தொலைபேசியை ஒட்டுக் கேட்பது எவ்வளவு எளிது என்பதை படங்கள் போட்டே விளக்கியிருக்கிறார்கள். நான் அதற்குள் அதிகம் போக விரும்பவில்லை. நான் அறிந்து கொள்ள விரும்பு வதெல்லாம் உங்களைப் போல ஒரு தலைமைச் செயலாளருக்கும் இன்னொரு வருக்கும் இடையே நடந்ததாக வந்திருக்கின்ற உரையாடல், எப்படி பத்திரிகையிலே வந்தது, யார் தந்தது, எவ்வாறு அது வெளியிடப்பட்டது என்பதையெல்லாம் ஆராய்ந்து உள்ளபடியே தலைமைச் செயலாளரும், அந்த அதிகாரியும் பேசியது இவைதான் என்றால், அதிலே குற்றம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் இது பற்றி ஒரு நீதி விசாரணை நடத்த இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொண்டு உயர்நீதி மன்றத்தின் ஓய்வு பெற்ற ஒரு நீதிபதியைக் கொண்டு இதைப் பற்றி விசாரித்து இந்த அவைக்கு அறிவிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதைத் தொடர்ந்து கோ.க.மணி, எஸ்.சுதர்சனம், சிவ.புண்ணியம், மு.கண்ணப்பன், சி.கோவிந்தசாமி, பீட்டர் அல்போன்ஸ், சி.ஞானசேகரன் ஆகியோர் பேசினர். இதையடுத்து முதல்வர் கலைஞர் அவர்கள் கூறியதாவது:–

உளவுத் துறையின் மூலமாக பெற்றிருக்கிற செய்தியென்று யாரோ ஒருவர் தான் செய்த உபாயத்தின் காரணமாக அதை ஒலிபரப்பி பத்திரிகையிலும் வெளியிட்டு மகிழ்ந்திருக்கிறார்கள் என்பதை நாம் மிகுந்த எச்சரிக்கையோடு கண்காணித்து மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும், இனி இத்தகைய நிலை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற அரசுக்குத் தேவையான அறிவுரைகளை காங்கிரஸ் கட்சியின் தலைவர் சுதர்சனம் அவர்களும், பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், மணி அவர்களும் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் உறுப்பினர்கள் கோவிந்தசாமி, சிவபுண்ணியம் ஆகியோரும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஞானசேகரன் பழைய பாணியிலேயே தன்னுடைய கருத்தை இங்கே வெளியிட்டிருக்கிறார். ஏதோ அரசாங்கமே தூண்டி இந்த ஒட்டுக் கேட்பதை செய்திருக் கிறது என்பதைப் போல பேசியிருக்கிறார். அது அவருடைய பாணி. நான் அதற்காகக் கவலைப்படவில்லை. அப்படி ஒரு குற்றச்சாட்டு இருந்தாலும், அதை விளக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காகத்தான் மொத்த எல்லாக் குற்றச்சாட்டுக்கும் ஒரு வழியாக நீதி விசாரணை ஏற்பாடு செய்யப்படும் என்று நான் இங்கே உறுதியளித்திருக்கிறேன்.

இன்னொன்று. பீட்டர் அல்போன்ஸ் எடுத்துக்காட்டியதைப் போலவும், நம்முடைய மணி அவர்கள் சொல்லிக் காட்டியதைப் போலவும் வளர்ந்து வருகின்ற விஞ்ஞானம் இன்றையதினம் மலிவானதாக மாத்திரமல்ல, எளிமையானதாகவும் ஆகியிருக்கிறது. உங்களுக்கு உதாரணம் சொல்ல வேண்டுமேயானால்,

என்னுடைய வீட்டிலேயே என்னால் கையாள முடியாத டி.வி.யை., என்னால் இயக்க முடியாத டி.வி.யை., பழுதாகி விட்டால் என்னால் சரி செய்ய முடியாத டி.வி. இயந்திரத்தை என்னுடைய பத்து வயதுக்கும் குறைந்த பேரன் ஒரு நிமிடத்திலே சரி செய்து விடுகிறான். அந்த அளவிற்கு விஞ்ஞானம் எளிமையாக இன்றைக்கு ஆகியிருக்கின்றது. அப்படி இருக்கும்போது, இதை யெல்லாம் படித்து விட்டு, அதிலே பெரிய தேர்வு பெற்று, அதற்குப் பிறகுதான் இந்த ஒட்டுக் கேட்கின்ற பணியைச் செய்திருக்க வேண்டுமென்று அல்ல, ஒரு பைத்தியக்காரன் கூட – இதைச் செய்ய முடியும் என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அதிலே ஒன்றுதான் நேற்றையதினம் வெளிவந்த அந்தச் செய்தியும், இன்றைக்கும் நாம் பேசிக் கொண்டிருக்கின்ற இந்தச் செய்தியுமாகும். இதைப் பற்றி நான் பிரச்சினை எழுப்பப்படும்போது, விளக்குவதற்கு தயாராகத்தான் வந்திருந் தேன். வந்தவுடன் பேரவைத் தலைவர் அறைக்குச் சென்று, இங்கு வருவதற்கு முன்பே அங்கே சென்று இன்று ஒத்தி வைப்பு தீர்மானம் என்ன வந்திருக்கிறது என்பதைக் கேட்டறிந்து அ.தி.மு.க. சார்பில் இந்த ஒத்தி வைப்பு தீர்மானத்தை இத்தனை பேர் கொடுத்திருக்கிறார்கள், மற்ற கட்சிகளின் சார்பில் யார் யார் கொடுத்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் அறிந்து, அவைத் தலைவர் கூட சொன்னார் – பொதுவாக இது கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இருந்தாலும் இதனை எடுத்துக் கொள்ளலாம் என்ற என்னுடைய கருத்தை அவரிடம் வலியுறுத்தி விட்டுத் தான் இங்கே வந்தேன்.

நான் எப்படி இதனை விளக்க வேண்டுமென்று எண்ணிய போது, அதற்கு எதிர்க்கட்சித் தரப்பிலே யாரும் இணங்கவில்லை. நீ என்ன விளக்குவது, நாங்கள் என்ன கேட்பது என்கின்ற முறையிலே எதிர்க்கட்சிக்காரர்கள் நடந்து கொண்டதை நீங்களும் பார்த்தீர்கள், பத்திரிகை நண்பர்களும் பார்த்தார்கள், நாடும் பார்த்துக் கொண்டிருக்கின்றது. நான் இங்கே சொல்ல விரும்புவது ஏதோ தலைமைச் செயலாளர் பேசக் கூடாத ஒன்றைப் பேசி விட்டார், சொல்லக் கூடாத ஒன்றை தன்னுடைய கீழ் மட்ட அதிகாரிகளிடம் சொன்னார். அது வெளி வந்து விட்டது என்றால், அது பெரிய தவறு. அது உள்ளபடியே நாம் தலை குனிய வேண்டிய ஒன்று. அப்படி ஒன்றும் நடக்கவில்லை. நடந்தது, ஒரு நிர்வாகப் பணி பற்றிய உரையாடல். இந்த நிர்வாகப் பணியை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்று தன்னுடைய சக அதிகாரிக்கு அல்லது துணை அதிகாரிக்கு ஒருவர் யோசனையாகச் சொன்னதை "டேப்" செய்து, அதை பத்திரிகையிலே வெளியிடுவதென்பது அவர்களுடைய வியாபாரத் திற்கு நல்லதே தவிர, ஏதோ ஒரு பெரிய ரகசியத்தை வெளியிட்டு விட்டார்கள் என்பதல்ல.

இங்கே நண்பர் மு. கண்ணப்பன் பேசும்போது அதிலே தேசத் துரோகமான விஷயம் இல்லாமல் இருந்திருக்கலாம், நாட்டிற்கு விரோதமான விஷயம் இல்லாமல் இருந்திருக்கலாம் என்றெல்லாம் சொன்னார்கள். அப்படி யெல்லாம் இருந்தால், அந்த டேப் எடுத்தவர்களும் தண்டிக்கப்படுவார்கள், அதற்குக் காரணமாக இருந்து குரல் கொடுத்தவர்களும் தண்டிக்கப்படுவார்கள் என்பது

இந்த அவையிலே உள்ள அனைவருக்கும் தெரியும். ஆனாலும் அந்தத் தண்டனை – அந்தத் தீர்ப்பு அவசரப்பட்டு கொடுக்கக் கூடியதாகும். இதை யார் டேப் செய்தது, யார் பேசியது என்பதையெல்லாம் தெரிந்து கொள்ளாமல் நாம் ஒரு முடிவுக்கு வர முடியாது. அதைத் தெரிந்து கொள்வதற்காகத் தான் நீதி விசாரணை வேண்டும், அதை அமைப்போம் என்று நான் சொல்லியிருக்கிறேன். அந்த நீதி விசாரணை நடக்கும்போது இன்றையதினம் நமக்கு ஏற்பட்டிருக்கும் குழப்பமெல்லாம் நிச்சயமாகத் தீரும், தலைமைச் செயலாளரைப் பற்றி நாம் கொண்டிருக்கின்ற எண்ணமும் நிலை பெறும்.

தலைமைச் செயலாளர் தமிழகத்தைக் காட்டிக் கொடுக்கவோ, தமிழக அரசுக்கு விரோதமாக நடக்கவோ இன்னொரு அதிகாரியிடம் பேசவில்லை. அவரோடு மறு முனையில் பேசிய அதிகாரியும், அத்தகைய எண்ணத்தோடு பேசியவரல்ல. அந்தப் பேச்சினுடைய ஆழமான உட்கருத்தை நாம் படித்துப் பார்க்கும்போது அவர்களை அப்படி சந்தேகப்படுவதற்கு கிஞ்சிற்றும் இடமில்லை என்ற காரணத்தால், இந்தப் பிரச்சினையை இதோடு இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் விட்டு விட வேண்டும், இதனை நீதி விசாரணைக்கு உட்படுத்துவோம் என்ற உறுதியோடு என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

சட்டப்பேரவையில் முதல்வர் கலைஞர் தோழமைக் கட்சிகளுக்கு வேண்டுகோள்!

சட்டப்பேரவையில் 18.4.2008 அன்று விலைவாசி உயர்வு பிரச்சினை காரணமாக இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளின் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். இந்த சம்பவத்திற்கு பதிலளித்து முதல்வர் கலைஞர் அவர்கள் கூறுகையில், "விலைவாசி பிரச்சினை தொடர்பாக நாட்டில் மதவாத சக்திகளுக்கு இடம் தரக்கூடாது. நாட்டை காடாக்காமல் பாதுகாக்கும் பெரும் பொறுப்பு நமக்கு உண்டு" என்று குறிப்பிட்டார். மேலும், "இந்தியாவில் மதவாத சக்தி இல்லாத ஆட்சியை காங்கிரசால்தான் தரமுடியும்" என்றும், "எதிர்க்கட்சியினரை கடுமையாக தண்டிக்க வேண்டும் என்ற பண்பாடு கொண்டவர்கள் அல்ல நாங்கள் " என்றும், "கிரீமிலேயர் வேண்டாம் என்பதுதான் எங்கள் கொள்கை. இதில் பொறுமையாக இருந்து வெற்றி பெறுவோம்" என்றும் தோழமைக் கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்."

சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரம் முடிந்ததும் அ.தி.மு.க. கொறடா செங்கோட்டையன் எழுந்து எங்களுடைய உறுப்பினர்கள் கோ.அரி, வி.பி.கலைராஜன் ஆகியோரை இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் நீக்கி வைத்திருக்கிறீர்கள். அதை ரத்து செய்து மீண்டும் இந்த அவையின் அலுவல்களில் அவர்களை பங்கேற்கச் செய்ய

வேண்டுமென்று வலியுறுத்தினார். இதையடுத்து பா.ம.க. உறுப்பினர் கோ.க.மணி எழுந்து 27 சதவிகித இடஒதுக்கீடு வழங்க உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது அதில் கிரீமிலேயர் என்ற கிருமி இருப்பதை அகற்றப்பட வேண்டும் என்று முதல்வர் கலைஞர் அவர்களே அறிவித்தார்கள். இந்நிலையில் மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு இந்த கிரீமிலேயர் வருமான வரம்பு உயர்த்தப்பட வேண்டுமென்று சொன்னதாக ஒரு பத்திரிகையில் செய்தி வந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

இதை தொடர்ந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சிவபுண்ணியம் எழுந்து விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த தவறிய மத்திய அரசை கண்டித்து இந்தியா முழுவதும், ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருக்கிறது. அதை வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வெளிநடப்பு செய்வதாக அறிவித்து அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் அவையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர். இதையே வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் எம்.கோவிந்தசாமியும் பேசிவிட்டு அந்தக் கட்சியின் உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர். அ.தி.மு.க.வினரும் வெளிநடப்புச் செய்தனர்.

இதைத் தொடர்ந்து முதல்வர் கலைஞர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:–

விலைவாசி உயர்வைச் சுட்டிக் காட்டி அதற்காக வெளியில் நடைபெறுகின்ற ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள், கிளர்ச்சிகள் இவைகளை முன்னிட்டு இவற்றை ஆதரிக்கும்

முகத்தான் வெளிநடப்பு செய்கிறோம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினரும், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியினரும், அ.தி.மு.க.வினரும் வெளி நடப்பு செய்திருக்கிறார்கள். நான் அவர்கள் இங்கேயிருந்து கருத்துக்களைச் சொல்லி விளக்கங்களைப் பெறாமல் வெளிநடப்பு செய்தமைக்காக வருத்தப்படுகின்றேன். வெளிநடப்பு என்பது ஜனநாயகத்திலே ஒரு முறை. அதைத் தான் அவர்கள் செய்து காட்டியிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்கள் மீது எரிச்சல் கொள்ளவில்லை. காழ்ப்பு கொள்ளவில்லை. ஆனால், ஒன்றை நாம் மறந்து விடக் கூடாது.

ஏதோ திடீரென்று நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் சுதர்சனம் கூறியதைப் போல விலைவாசி விண் உயரத்திற்கு ஏறி அது உடனடியாகத் தடுக்கப்பட வேண்டும் என்று ஒரு நிலை எடுத்து, இன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சிகளின் நண்பர்கள், அதாவது இடதுசாரி கட்சிகளின் நண்பர்கள் இந்த அறப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்று சொல்ல இயலாது. (இந்த நேரத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், அ.தி.மு.க. உறுப்பினர்களும் மீண்டும் அவைக்குள் வந்தார்கள்) அது அரைப் போராட்டம் என்ற காரணத்தினால் தான் (மேசையைத் தட்டும் ஒலி) சென்றவர்கள் திரும்பி வந்து விட்டார்கள். எவ்வளவு விரைவாக தொலைபேசியிலே செய்தி வருவதைப் போல அவர்களுக்கு தகவல் வந்து – வெளி நடப்பா? உள்ளே செல்லுங்கள், என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, உள்ளே

மீண்டும் வந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சி யடைகிறேன்.

யாரையும் கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை

இங்கே நான் ஓர் அறிக்கையைப் படித்து முடித்த பிறகு – நான்கைந்து பிரச்சினைகள் கிளப்பப்பட்டன. ஒன்று, நம்முடைய எதிர்க்கட்சியின் கொறடா செங்கோட்டையன் அவர்கள் அந்தக் கட்சியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் மீது ஒரு தீர்மானத்தை நம்முடைய அவை முன்னவர் கொண்டு வந்து, அதன் காரணமாக வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள், அவர்களை மீண்டும் அவைக்குள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டார். யாரையும் அல்லது எதிர்க்கட்சியிலே உள்ளவர்களை கடுமையாகத் தண்டிக்க வேண்டும், அல்லது கேவலமாகத் தண்டிக்க வேண்டுமென்ற நிலை எடுப்பதல்ல இன்றைய ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம். அவர்கள் ஆளுங்கட்சியாக இருந்த போது, தனியாகவும் சிறப்பாகவும் ஒரு கூண்டே தயாரிக்கப்பட்டு, அதிலே தண்டனை என்ற பெயரால் முரசொலி செல்வத்தை – அந்தக் கூண்டிலே நிறுத்தி, அப்படி கூண்டிலே நிறுத்துவது செல்வத்திற்கு தரப்பட்ட தண்டனை என்று அதைப் பார்த்துப் பார்த்து களித்தார்கள். நான் அன்றைக்கு உள்ளே இல்லா விட்டாலுங்கூட, அந்தக் கூண்டு இருந்த இடத்தைப் பார்த்தேன்.

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் படத்திற்கும் எங்களை ஆளாக்கிய தலைவர் அறிஞர்

அண்ணாவின் படத்திற்கும் இடையில் அந்தக் கூண்டு நிறுத்தப் பட்டிருந்தது. பரவாயில்லை, செல்வம் இருவருக்குமிடையே தான் நிற்கிறான், அண்ணாவின் அன்பிற் குரியவனாக வாழ்ந்தவன், இருந்தவன், செல்வா, செல்வா என்றே அண்ணா அவர்களால் அழைக்கப்பட்டவன். அதைப் போலவே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே அளவற்ற பிரியம் கொண்டு அவருடைய ரசிகனாகவே இருந்தவன், அவர்களின் படங்களுக்கு நடுவிலே குற்றவாளி கூண்டில் நிறுத்தப்பட்ட அந்தக் காட்சியையெல்லாம் அ.தி.மு.க. ஆளுங்கட்சியாக இருந்த போது, நடத்தப்பட்ட தண்டனை விவரங்கள். அதைப் போல எதிர்க்கட்சியை கேவலப்படுத்த வேண்டுமென்றோ, தண்டிக்க வேண்டும் என்றோ தி.மு.க. ஆட்சி நினைத்ததுமில்லை. எங்களுடைய தோழமைக் கட்சியிலே உள்ள அத்தகைய பண்பாடு கொண்டவர்களும் அல்ல. அவர்களுடைய அறிவுரையைப் பெற்று நடந்து வருகின்ற இந்த ஆட்சியில் நம்முடைய நண்பர் செங்கோட்டையன் அவர்கள் வைத்த அந்தக் கோரிக்கையை அறவே ஏற்றுக் கொள்ள முடியாது என்று நான் மறுக்காமல் – நாம் எல்லாம் அண்ணாவின் வழி வந்தவர்கள் என்ற அளவில், அவர்கள் செய்த குற்றத்தை – இழிந்த செயலை – என் கண் எதிரிலேயே நடந்த அந்தக் காட்சியை நான் நேராகக் கண்டிருந்தும் கூட – நம்முடைய அவை முன்னவர் கொடுத்த தீர்மானத்தையேற்று இரண்டு நண்பர்களை இந்தக் கூட்டத் தொடர் முடிகின்ற வரையிலே அவர்கள் உள்ளே வரக் கூடாது என்று செய்திருந்ததை – அந்தத் தண்டனையைக் குறைத்து நான் பரிந்துரை

செய்கிறேன் – நான் அவைத் தலைவர் அவர்களுக்கு முதலமைச்சர் என்ற முறையிலே உத்தரவிடுவதாக யாரும் கருதக் கூடாது. நான் பரிந்துரை செய்கிறேன். கூட்டத் தொடர் முழுவதும் என்பதை, ஒரு வார காலம் என்கிற அளவிற்கு குறைத்து அந்தத் தண்டனையை அவர்களை மீண்டும் இங்கே அனுமதிக்க வேண்டுமென்று அவைத் தலைவராகிய தங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். அதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்றும் நம்புகிறேன்.

அடுத்து இங்கே கோ.க.மணி அவர்களால் ஒரு குற்றச்சாட்டு கூறப்பட்டது. டி.ஆர்.பாலு அவர்கள் டெல்லியிலேயே தமிழகம் சார்பில் உள்ள அமைச்சர்களிலே ஒருவராக இருக்கிறார். அவர் இந்த "கிரீமிலேயரைப்" பற்றி அங்கே பேசிய பொழுது, வேண்டுமானால் வருமான உச்ச வரம்பை இன்னும் கொஞ்சம் அதிகமாக வைத்துக் கொள்ளுங்கள் என்று அவர் சொன்னதாகப் பத்திரிக்கையிலே வந்ததை மணி அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார். அப்படி வந்திருந்தால் அது தவறு. அப்படி டி.ஆர்.பாலு சொல்லியிருந்தால் அது தி.மு.கழகம் வடித்துக் கொடுத்த கொள்கை அல்ல என்பதையும் அதைப் பற்றி சிந்தித்து ஒரு முடிவெடுக்க 18ஆம் தேதி அன்று தி.மு. கழகத்தினுடைய உயர் மட்டக் குழு கூடுகிறது. அந்தக் குழுவிலே தான் நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர்களும், இங்குள்ள தி.மு.கழகத்தினுடைய தலைமைக் கழகச் செயலாளர்களும், மற்றவர்களும் கூடிப்பேசி முடிவை அறிவிக்க இருக்கிறோம். "கிரீமிலேயர்" வேண்டாம் என்பது

தான் எங்களுடைய கொள்கை. (மேஜையைத் தட்டும் ஒலி) ஆனால், முதலில் நாம் இன்றைக்கு பெற்றிருக்கிற மகிழ்ச்சி 27 சதவிகித இட ஒதுக்கீடு. உச்சநீதிமன்றம் அதை ஏற்றுக் கொண்டுள்ளது என்பது அளவில்லாத மகிழ்ச்சியை வழங்கிக் கொண்டிருக்கிறது. கிரீமிலேயர் இருக்கிறது என்பதற்காக நாம் அந்த மகிழ்ச்சியை அப்படியே கை கழுவி விடக் கூடாது. அந்த மகிழ்ச்சியோடு, கவலையும் இருக்கிறதே, இதை நாம் எப்படியாவது துடைக்க வேண்டும், அதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதிலே நாம் யாருக்கும் சளைத்தவர்களாக இருக்க மாட்டோம். அதைப் பற்றி நான் நம்முடைய தோழமைக் கட்சிகளின் நண்பர்களோடும், வெளியிலே இருக்கின்ற தோழமைக் கட்சிகளின் தலைவர்களோடும் அதைப்பற்றிக் கலந்து பேசி ஏற்கும் வகையிலே ஒரு நல்ல முடிவைக் காண்போம் என்ற அந்த உறுதியை இந்த மாமன்றத்திற்கு தர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் அதுபற்றி திருமதி சோனியா காந்தி அவர்களுக்கும், பிரதமர் அவர்களுக்கும் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு பேசிய போதும் சரி, நம்முடைய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அர்ஜுன் சிங் அவர்களோடு தொடர்பு கொண்டு பேசிய போதும் சரி – அவர்கள் எல்லாம் இதிலே நம்பிக்கையான முறையிலேதான் எனக்கு உறுதி அளித்திருக்கிறார்கள். இதிலே நாம் படிப்படியாக முன்னேறுவோம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அப்படி முன்னேறுகிற நேரத்தில் அதற்கு இடைஞ்சலாக நம்முடைய நடவடிக்கைகள்

அமைந்து விடக் கூடாது என்பதை நான் மிகுந்த பணிவன்போடு – நமக்கு காரியம் பெரியது, அந்தக் காரியத்திலே எதிர்காலச் சந்ததியினரை கல்வித் துறையில், சமுதாயத் துறை யில், சமூக நீதித் துறையில் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பை அன்று முதல் இன்று வரை மேற்கொண்டிருக்கின்ற நாம் கை விட்டு விடக் கூடாது, அதை வீணடித்து விடக் கூடாது என்பதற்காக பொறுமையாக இருந்து – பொறுமை நிச்சயமாக வெல்லும் என்ற நம்பிக்கையோடு அந்தப் பொறுமையை நாம் கடைப்பிடிப்போம் (மேஜையைத் தட்டும் ஒலி) என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, விலைவாசி உயர்வு ஏதோ இங்கே ஆளுங்கட்சியாக அமர்ந்திருக்கின்ற எங்களுக்கெல்லாம் பிடித்த ஒன்று – அது எதிர்க்கட்சிகளிலே உள்ளவர்களுக்குத் தான் பிடிக்காத ஒன்று – என்பதல்ல. விலை வாசி உயர்கிற நேரத்தில் வாங்கும் சக்தி அதிகமானால், விலைவாசியின் கனம் தெரியாது, சுமை தெரியாது என்பது ஒரு பொருளாதாரக் கணக்கு. ஒரு காலத்தில் தங்கத்தின் விலை பவுன் இருபது ரூபாயாக இருந்தது. இப்போது பவுன் விலை பத்தாயிரம் ரூபாய் என்ற அளவிற்கு சகட்டு மேனிக்கு ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளிலும் தொலைக் காட்சிகளிலும் செய்தி வருவதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். ஆகவே வாங்கும் சக்தி உள்ளவர் களாக சாதாரண பிரஜை ஆகி விட்டால், எவ்வளவு தான் விலைவாசி உயர்ந்தாலும் அது தேர்தலிலே பயன்படுத்துவதற்குத் தான் உதவுமே தவிர, அந்த

உயர்வினால் யாரும் வேதனைப்பட மாட்டார்கள். ஆனால் அதைச் சமாளிக்க வாங்கும் சக்தியை நாம் உயர்த்த வேண்டும். அந்தப் பொருளாதாரத்தை ஒரு நாடு கடைப்பிடிக்க வேண்டும். ஒரு ஆட்சி கடைப்பிடிக்க வேண்டும். அப்படி கடைப்பிடித்தால் விலைவாசியினால் பெரும் பாதகம் ஏற்பட்டு விடாது.

நம்முடைய மத்திய அரசு இந்த விலைவாசி உயர்வுக்குப் பொறுப்பேற்க வேண்டுமென்று சொல்லுகிறோம். சொல்லுகிற அதே நேரத்தில் இங்கேயிருந்து வெளி நடப்பு செய்வது பொருத்தமானதா என்று எனக்குத் தெரியவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள், எனக்கு தோழர்கள், தி.மு. கழகத்தின் தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். அவர்களுக்கும் நான் சொல்லிக் கொள்வேன். இந்தியாவில் எது வரக் கூடாது என்று கருது கிறோம்? எது ஆதிக்கத்தைக் கைப்பற்றக் கூடாதென்று கருதுகிறோம்? மத வாத சக்திகள் – பகுத்தறிவுக்கு விரோதமானவர்கள் – இவர்கள் ஆட்சியைக் கைப்பற்றக் கூடாது, மத வெறி கூடாது, காந்தி அடிகளையே கொன்ற பாவிகளின் ஆட்சி வந்து விடக் கூடாது என்பதற்காகத் தான் நாம் மத வாத சக்திகளுக்கு இடம் தராத ஓர் ஆட்சி வேண்டுமென்று சொல்லும்போது அதையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால் மிச்சப் படுவது யார் என்கிற போது – இன்றைக்கு இந்தியாவிலே மத வாத சக்தியாக இல்லாத ஓர் ஆட்சி உருவாக வேண்டுமேயானால், தற்போது அது காங்கிரஸ் கட்சியினால்தான் முடியும் (மேஜையை தட்டும் ஒலி) – இன்றைக்கு நம்முடைய கோவிந்தசாமி ஏற்றுக்

கொள்கிறாரோ இல்லையோ, முந்தாநாள் ஏற்றுக் கொண்டவர்தான், நாளைக்கும் ஏற்றுக் கொள்ளப் போகிறவர் தான் (மேஜையைத் தட்டும் ஒலி) – மத வாத சக்தி வளர்ந்தால் பரவாயில்லை, அதற்காக விலைவாசி உயர்வைத் தடுக்காமல் இருந்த காங்கிரஸ் கட்சியை ஆள விட மாட்டோம் என்று அவர்கள் சொல்ல மாட்டார்கள். பொதுவான ஒரு நிலை – மதவாதமற்ற – மனித நேயமிக்க – ஓர் ஆட்சி வரவேண்டுமென்பதிலே யாருக்கும் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது.

அந்தக் கருத்துக்களின் ஒற்றுமையிலே தான் எதிர்கால இந்தியா வாழ முடியும், வளர முடியும், வெல்ல முடியும், அப்படிப்பட்ட ஒற்றுமையை நாம் உருவாக்க வேண்டும். மத்திய சர்க்கார் தவறு செய்கிறது என்பதற்காக அதைச் சுட்டிக் காட்டி, நாங்கள் சொன்னதைக் கேட்கவில்லை, அவர்கள் இதற்கு முன்பே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்று கூறி, மாநில அரசைக் கண்டித்து நீங்கள் வெளிநடப்பு செய்தது – முறையல்ல. ஆனால் வெளி நடப்பு என்பது ஜனநாயகத்திலே ஏற்றுக் கொண்ட முறை என்ற காரணத்தால், நான் அதற்காக சினம் கொள்ளவில்லை, சீற்றம் கொள்ளவில்லை, வருத்தப்படவில்லை. இதிலே ஆளுங்கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் இந்த வெளி நடப்பிலே கலந்து கொள்ள முடியாது. கலந்து கொள்ளக் கூடாது.

ஏனென்றால் நாமெல்லாம் சேர்ந்து தான் ஒரு அணியைத் தொடங்கினோம். அந்த அணி மதவாத அணி

அல்ல. மதவாத சக்திகளுக்கு எதிர்ப்பான அணி – அந்த அணியிலே பிணி வந்து விடக் கூடாது. அந்த அணி நல்ல முறையிலே இயங்க வேண்டும். அப்படி இயங்க வேண்டுமென்பதற்காகத் தான் – உங்களுக்குத் தெரியும் – கடந்த காலத்திலே – நான்கைந்து மாத காலமாக – அணுசக்தி விவகாரத்திலே கூட ஏற்படவிருந்த பிளவை அந்தப் பிளவு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள அந்தப் பெரும் பணியை ஓரளவு நான் ஏற்றுக் கொண்டிருந்தேன் (மேஜையை தட்டும் ஒலி) என்பதும் வட புலத்திலே உள்ள கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கெல்லாம் அந்த உண்மை தெரியும் என்பதும் நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. பத்திரிகைகளிலே வந்த செய்திகள். ஆகவே அவர்களும் சரி, நானும் சரி காங்கிரஸ் கட்சியின் செய்கையிலே அவசரப்படாமல் நாம் ஏற்றுக் கொண்டிருக்கின்ற கொள்கை, மக்களை மதவாதத்திலிருந்து மீட்க வேண்டும், மத வெறியிலிருந்து மீட்க வேண்டும், மத வாத சக்திகளுக்கு இடம் தரக் கூடாது, மீண்டும் ஒரு அயோத்தி, மீண்டும் ஒரு ராம ரதம், மீண்டும் அத்வானி அவர்களின் புயல்வேகச் சுற்றுப்பயணம் என்றெல்லாம் நாட்டிலே ஏற்பட்டால், நாடு காடாகி விடும் – காடாகாமல் நாட்டைப் பாதுகாக்க வேண்டிய அந்தப் பெரும் கடமை நமக்கு இருக்கிறது என்பதை எடுத்துரைத்து இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

வீரப்பன் தேடுதல் வேட்டையில் அதிரடிப்படையினரால் பாதிக்கப்பட்டோரில் விடுபட்டவர்களுக்கும் நிவாரணம்

சட்டப்பேரவையில் முதல்வர் கலைஞர் அறிவிப்பு

சென்னை, ஏப். 22–

வீரப்பன் தேடுதல் வேட்டையில் தமிழக கர்நாடக அதிரடிப்படையினரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு கோடியே 20 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தப் பிரச்சினை முடிந்துவிட்ட பிறகு பிரச்சினை இருப்பதாகக் காட்டி போராடுவது தேவைதானா? அப்படி பாதிக்கப்பட்டவர்களில் யாராவது விடுபட்டிருந்தால் அதை விசாரித்தறிந்து அவர்களுக்கும் நிவாரண உதவி அளிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்று சட்டப்பேரவையில் நேற்று முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்.

சட்டப்பேரவையில் 21.4.2008 அன்று கேள்வி நேரம் முடிந்ததும் பா.ம.க. உறுப்பினர் கோ.க.மணி எழுந்து வீரப்பன் தேடுதல் வேட்டையில் அதிரடிப் படையினரால் பாதிக்கப் பட்டோருக்கு நிவாரண உதவி வழங்குவது குறித்து பேசினார்.

இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:–

கோ.க.மணி :– வீரப்பன் தேடுதல் வேட்டை என்ற பெயரால் கர்நாடக – தமிழ்நாடு காவல் அதிரடிப் படையினரால் மிகவும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பாதிப்படைந்தவர்கள் கூட நிவாரணம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நடைபயணம் வந்தவர்களை யெல்லாம் கூட கைது செய்திருக்கிறார்கள். மனித உரிமை அமைப்புதான் அதைச் செய்கிறார்கள் – அவர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்.

முதல்வர் கலைஞர் :– உலக விஷயங்களை யெல்லாம் முனைப்பாகத் தெரிந்து கொள்ளக் கூடிய ஆற்றல் படைத்த மணி அவர்களுக்கு இந்த விஷயம் எப்படி தெரியாமல் போனது என்றுதான் எனக்கு புரியவில்லை.

வீரப்பனைத் தேடுகின்ற அந்தப் பணியில் அப்பொழுது அதிரடிப்படையினர் நடத்திய சில பாதிப்பான காரியங்களால் இன்றைக்கும் சிரமத்திலே இருக்கின்ற அந்த மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக ஒரு விசாரணைக் கமிஷன் அப்பொழுதே நியமிக்கப்பட்டது. நீதிபதி சதாசிவா அவர்களுடைய தலைமையில் அந்த விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டு அதனுடைய அறிக்கை வருவதற்கு முன்பு அக்டோபர் 2006ல் நாங்கள் – தி.மு.கழக அரசினால் முதற்கட்டமாக 20 இலட்சம் ரூபாயை இடைக்கால நிவாரணமாக போலீசாருடைய கெடுபிடிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அப்பொழுது கொடுக்கப்பட்டது.

அதற்குப் பிறகு, நீதிபதி சதாசிவா அவர்களுடைய கமிஷனின் அறிக்கை வெளிவந்தது. அவர் குறிப்பிட்டபடி, கர்நாடகத்திலே – தமிழகத்திலே மொத்தம் 89 பேர் பாதிக்கப்பட்டார்கள். தமிழகத்திலே எவ்வளவு பேர்,

கர்நாடகத்திலே எவ்வளவு பேர் என்று கணக்கு வைத்து அவர்கள் தந்த அந்தக் குறிப்பின்படி – அவர்களுடைய தாக்கீதின்படி, தமிழக அரசின் சார்பாக ஒரு கோடியே ஐம்பது ஆயிரம் ரூபாய் அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு தி.மு.க. ஆட்சி பிப்ரவரி 2007ல் கொடுக்கப்பட்டு, அவர்களிடம் அதற்கான ரசீதுகளெல்லாம் பெற்று பத்திரிக்கைகளிலும் வெளிவந்திருக்கிறது. இவ்வளவுக்கும் பிறகு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள ஒரு அறிக்கையில், "நாங்கள் நீதி கேட்டு நெடிய பயணம் புறப்படுகின்றோம். அந்தப் பயணம் தமிழகத்திலும், கர்நாடகத்திலும் நடைபெறும். தமிழக அரசும், கர்நாடக அரசும் அந்தத் தொகையைத் தர வேண்டும்" என்று வலியுறுத்தி ஒரு பத்திரிக்கையிலே செய்தி வந்தது. நான் கூட, நண்பர் தா.பாண்டியன் அவர்களை அழைத்து அவர்களிடத்திலே நேற்றைக்கு முன்தினம் ஒரு மணி நேரம் பேசியிருக்கிறேன். அவரோடு நண்பர் மகேந்திரனும் இருந்தார் சாட்சிக்கு. இருவரும் நான் காட்டிய அந்த ஆதாரங்களையெல்லாம் பார்த்து விட்டு – ஆங்கிலத்திலே வெளியிடப்பட்ட அந்த அரசாணைகள் – யார் யாருக்கு எவ்வளவு ரூபாய் கொடுக்கப்பட்டது என்ற அந்த ஆதாரங்கள் – ஒரு கோடியே இருபது லட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு வழங்கப்பட்ட அந்த ஆதாரம் – இவ்வளவும் தமிழ்நாட்டின் எல்லைக்குள்ளே பாதிக்கப்பட்டவர்களுக்குத் தரப்பட்ட நிதி இவ்வளவை நாங்கள் தந்து விட்டோம்.

ஆகவே, நாங்கள் எங்களுடைய கடமையைச் செய்து விட்டோம். கடமையைச் செய்ய வேண்டியது

கர்நாடக அரசுதான். அவர்கள் அப்போதே பாதியை ஒத்துக் கொள்வதாகச் சொன்னார்கள். இன்னும் கொடுக்கவில்லை என்றால் உங்களுடைய போராட்டம் அங்கல்லவா நடைபெற வேண்டும். ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டிதானா என்று நான் அவர்களிடத்திலே கேட்டேன். அவர்கள் நான் கொடுத்த ஆதாரங்களைப் பார்த்து விட்டு சரி என்றுதான் சொல்லிவிட்டுப் போனார்கள். ஆனால், அதற்கு முன்பே போராட்டத்தை அறிவித்துவிட்ட காரணத்தால் அவர்கள் நேற்றைய தினம் அந்தப் போராட்டத்தை நடத்தி ஒரு 200 பேர் கைது செய்யப்பட்டார்கள் என்று கேள்விப் பட்டவுடன் அவர்கள் நல்ல எண்ணத்தோடுதான் போராடி யிருக்கிறார்கள் – ஆகவே, அவர்களை விடுதலை செய்யுங்கள் என்று இங்கிருந்து தாக்கீது அனுப்பப்பட்டு, அவர்களும் விடுதலை செய்யப் பட்டு விட்டார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் நம்முடைய நண்பர் மணி அவர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, பிரச்சினை முடிந்து விட்ட பிறகு, பிரச்சினை இருப்பதாகக் காட்டி அதற்காகப் போராடுவது தேவையா என்பதை இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் யோசித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

கோ.க.மணி :– நீதிபதி சதாசிவா கமிஷன் கோரிக்கையின் படி முதலில் நிவாரணம் வழங்கியது தமிழக அரசு தான். அதை நான் மறுக்கவில்லை. அதை வரவேற்றும், அப்போது அதைப் பாராட்டியும் கூட

அறிக்கைகள் கொடுத்தோம். ஆனால், அந்த 89 பேருக்கும் மேலே விடுபட்டவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் உதவ வேண்டும் என்றும், அதே நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் கர்நாடகத்தில் இருந்தவர்கள் கூட, தமிழர்கள் என்ற காரணத்தாலே நீண்ட காலமாக தமிழ்நாட்டிலே குடியிருந்து வருகிறார்கள். கர்நாடக அரசு நிவாரண உதவி வழங்க மறுக்கிறது. ஆகவே, தமிழக அரசின் சார்பில் கர்நாடக அரசிடம் கோரிக்கை வைப்பதற்கு இங்கே தொடர் பயணம் வந்திருக்கிறார்கள். இன்று காலையில் அந்தியூரில் கூட கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தமிழக அரசு நல்ல தீர்வினை வழங்க வேண்டுமென்று வேண்டுகோள் வைக்கிறோமே தவிர குற்றச்சாட்டு அல்ல என்பதை அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

முதல்வர் கலைஞர் : வேண்டுகோளாக இருந்தால், இந்தத் தொகையில் – எண்ணிக்கையில் – யார் யார் விடுபட்டு விட்டது என்பதை அமைதியான முறையில் எழுதி தமிழக அரசுக்கு அனுப்பி அதற்குப் பிறகும் தமிழக அரசு கவனிக்காவிட்டால், நானே கூட உங்களுடைய போராட்டத்திற்கு தலைமை வகிக்க வருகின்றேன். ஆனால், நான் கேட்பதெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கும் பொழுதே – கொடுத்து முடித்த பிறகு – ஒரு கோடி ரூபாய் – மேலும் ஐம்பதாயிரம் ரூபாய் – அதற்கு முன்பே அச்சாரமாக இருபது லட்சம் ரூபாய் – இப்படிக் கொடுத்த அரசின் மீதே நீங்கள் போராட்டம் நடத்துவது எப்படி நியாயம் என்பது தான் என்னுடைய கேள்வி. இந்த நியாயத்தை நீங்கள் புரிந்து கொண்டால்

போதும். கர்நாடக அரசு கொடுக்கவில்லை – எதையும் கொடுக்கவில்லை – காவேரியிலிருந்து ஒகனேக்கல் வரையிலே அவர்கள் தடையாகத்தான் இருக் கிறார்கள். அதையெல்லாம் பெற வேண்டிய முறையிலே நாம் பெறுவோம். ஆனால், இது வேறு விஷயம்.

வை.சிவபுண்ணியம் : – முதலமைச்சர் அவர்கள் இந்த அதிரடிப்படைத் தாக்குதல் குறித்த விஷயங்களை இந்த அவையிலே நீண்ட நேரம் நாம் விவாதித்து அதன் மீது கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் என்ற முறையிலே நானும், அந்த மானியக் கோரிக்கையில் பேசுகின்ற பொழுது பத்மாவதி அவர்களும் அந்தக் கோரிக்கையை எழுப்பி நீதிபதி சதாசிவா கமிஷன் அறிக்கையினுடைய அந்தத் தீர்ப்பின் படி நிதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் வைத்தபோது, உடனடியாக இந்த அவையிலேயே மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதி வழங்க உத்தரவை வழங்கி நிதி வழங்கப்படும் என்று அறிவித்து அப்படியே பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு எந்தவிதமான மாறுபாடான கருத்தும் இல்லை. இந்தப் போராட்டம் என்பது – மாநிலச் செயலாளர் பாண்டியன் அறிவித்திருப்பது தமிழக அரசுக்கு எதிராகவோ, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எதிராகவோ இது நடைபெறவில்லை என்பதையும் அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார். ஆனாலும், இதிலே இருக்கிற பிரச்சினையைப் பொறுத்த வரையில், அவர்களுடைய கோரிக்கை – கண்டறியப்பட்டு சாட்சி சொன்ன அனைவருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிவாரண

உதவி வழங்கி விட்டார்கள் – அதிலே எந்தக் குறைபாடும் இல்லை. அவர்களுடைய கோரிக்கை என்பது, சாட்சியம் சொல்ல வருவதற்கே தயாராக இல்லாமல் – அச்சத்தின் காரணமாக வராதவர்கள் – அவர்களில் யார் தாக்குதலுக் குள்ளாக்கப் பட்டார்கள் அதிரடிப்படையால் என்பதைக் கண்டறிந்து, அதில் உண்மையாக இருப்பவர் களுக்குரிய நிவாரணம் வேண்டுமென்பதுதான் அவர் களுடைய கோரிக்கையாக இருக்கிறது. அந்தப் பட்டியலில் உண்மையைக் கண்டறிந்து அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான முயற்சி எடுக்க வேண்டும்.

முதல்வர் கலைஞர் :– என்ன இருந்தாலும் தஞ்சாவூர் பண்பாடே தனி தான். அந்த முறையிலே நம்முடைய நண்பர் சிவபுண்ணியம் அவர்கள் விவாதித்திருக்கின்றார். நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், உண்மையில் யார் யார் பாதிக்கப்பட்டார்கள் – யார் யார் சாட்சி சொல்லவே வர முடியவில்லை என்ற விவரங்கள் எங்களுக்கு இது வரையிலே அளிக்கப்படவில்லை – அப்படி அளிக்கப்பட்டால் அதை ஆராய்ந்து அதிகாரிகள் மூலமோ அல்லது நாங்களே அதைப் பற்றி விசாரித்தறிந்து அவர்களுக்கு ஏதேனும் நிவாரணம் அளிக்க வேண்டுமென்றால் அதை அளிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. ஆனால், எடுத்த எடுப்பிலே போராட்டம் என்று அறிவிப்பது அவ்வளவு நல்லதல்ல.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

வெள்ளம் – புயல் – பூகம்பம் ஏற்படும் பொழுது எல்லாக் கட்சிகளும் இணைந்து செயல்படுவதுபோல் தீவிரவாதம் தலையெடுப்பதை தடுத்திட அனைத்துக் கட்சிகளும் முன்வர வேண்டும்!

சட்டப் பேரவையில் முதல்வர் கலைஞர் வேண்டுகோள்

சட்டப் பேரவையில் 22.4.2008 அன்று சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

தமது உரையில், "தமிழகத்தில் தீவிரவாதச் செயல்கள் நுழையாமல் தடுத்திட அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது" எனத் தெரிவித்த முதல்வர் கலைஞர், "வெள்ளம், புயல், பூகம்பம் ஏற்படும்போது எல்லாக் கட்சிகளும் இணைந்து செயல்படுவது போல, தீவிரவாதம் தலையெடுப்பதைத் தடுத்திட அனைத்துக் கட்சிகளும் முன்வர வேண்டும்" என வேண்டு கோள் விடுத்தார்.

சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரம் முடிந்ததும் பெரியகுளம் அருகில் நக்சலைட் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது இந்த தீர்மானத்தின் மீது ஓ. பன்னீர்

செல்வம் (அ.தி.மு..க.) பீட்டர் அல்போன்ஸ் (காங்கிரஸ்), திருக்கச்சூர் ஆறுமுகம் (பா.ம.க.) பாலபாரதி (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்) சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்) ஆகியோர் பேசினர்.

இதற்கு பதிலளித்து முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் பன்னீர் செல்வம் அவர்களும், அவரைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியின் சார்பாக பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக ஆறுமுகம் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பாலபாரதி அம்மையார் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சிவபுண்ணியம் அவர்களும் இங்கே இந்த அவையில் வைத்து எடுத்துக் கூறிய கருத்துக்களைப் பற்றி என்னுடைய கருத்துக்களையும் அவற்றோடு இணைத்து வழங்கிட விரும்புகின்றேன்.

இங்கே பேசப்பட்ட தீவிரவாதம் என்பது அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப்போல் ஒரு கட்சியை இன்னொரு கட்சி குறை கூறுவதற்காக எழுப்பப்பட்ட சொற்றொடர் அல்ல. இன்னும் சொல்லப்போனால், ஒரு அரசுக்கு எதிராக பயன்படுத்தப் பட்ட வார்த்தையும் அல்ல. தீவிரவாதம் என்பது பொதுவாக எந்த ஆட்சி நடைபெற்றாலும் அந்த ஆட்சியை நடத்துகின்றவர்கள், எதிர் தரப்பிலே இருக்கின்றவர்கள், அந்த ஆட்சியினுடைய பரிபாலனத்திற்கு உட்பட

பொதுமக்கள் எல்லோருமே தீவிரவாதத்தினுடைய பலனை அனுபவிக்க வேண்டியவர்கள்தான்.

எப்படி வெள்ளம் வந்தால், புயலடித்தால், பெருமழை பெய்தால், ஏன் பூகம்பமே ஏற்பட்டால் அந்த நேரங்களில் எல்லா கட்சிகளும் ஒன்றாக இணைந்து அதனுடைய பாதிப்புகளை தாங்கிக் கொள்ளக் கூடிய அளவிற்கு மக்களிடத்திலே தங்களுடைய அணுகு முறையை நடத்திக் காட்டுவதும், பாதுகாப்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் பொதுவானதாக இருப்பதைப் போலவே, தீவிரவாதம் தலையெடுக்கின்ற நேரத்தில் அதைத் தவிர்ப்பது, தடுப்பது இதுவும் எல்லாக் கட்சிகளும் பொதுவானதாகக் கருதித் தடுப்பதற்கு முன்வர வேண்டும். அந்த வேண்டுகோளைத்தான் இந்த அவையிலே நான் முதலில் இந்த நேரத்தில் வைக்க விரும்புகின்றேன்.

இப்பொழுது ஒன்றிரண்டு சம்பவங்கள் நடைபெற்று அதன் காரணமாக இன்று எழுப்பப்பட்டுள்ள கவன ஈர்ப்புத் தீர்மானம் பற்றிய விவரங்களைக் கேட்ட நேரத்தில் காவல் துறை மூலமாக, அதிகாரிகள் மூலமாக அரசுக்கு வந்துள்ள அல்லது அரசின் சார்பில் சேகரித்த அறிக்கையின் சில பகுதிகளை இங்கே நான் வெளியிட விரும்புகின்றேன்.

இந்த அரசு பதவி ஏற்றதிலிருந்து மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை பராமரிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து, அண்டை மாநிலங்கள் உட்பட பல மாநிலங்களில் வளர்ந்து வரும் தீவிரவாத செயல்களை

கருத்தில் கொண்டு, அந்தச் செயல்கள் தமிழகத்தில் நுழையாமல் பார்த்துக் கொள்ளத் தேவையான அனைத்து தடுப்பு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. தமிழக அரசின் அறிவுரைப்படி, காவல் துறையினர் இதுபோன்ற தீவிரவாத அமைப்புக்களின் நடவடிக்கை களையும், தடை செய்யப்பட்ட இயக்கங்களின் நடவடிக்கைகளையும் கண்காணித்து, மாநிலம் முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தியும், மாநில எல்லைகளில் சோதனைச் சாவடிகளை அமைத்தும், கடலோர மாவட்டங்களில் சோதனைகளைத் தீவிரப்படுத்தியும், காட்டுப்பகுதிகளில் அடிக்கடி தீவிர சோதனைகளை நடத்தியும், தீய சக்திகள் தமிழகத்தில் வேரூன்றிவிடா வண்ணம் பார்த்து வருகின்றார்கள்.

இதுபோன்ற நடவடிக்கையின் விளைவாக, 2006ஆம் ஆண்டு ஆந்திர மாநிலம் கிருஷ்ணா மற்றும் பிரகாசம் மாவட்டங்களில் கிராந்தி போக்குவரத்துக் கம்பெனிக் கிடங்கில் அதிக அளவு ராக்கெட் லாஞ்சர் உதிரி பாகங்கள் கைப்பற்றப்பட்டு, அவை கிராந்தி போக்குவரத்து கம்பெனி சென்னை கிளையிலிருந்து அனுப்பப்பட்டவை என்ற தகவல் கிடைத்தபோது, க்யூ பிரிவினர் உடனடியாக செயல்பட்டு, இரண்டு நாட்களுக்குள், மேற்படி உதிரி பாகங்களை தயாரித்த லேத் உரிமையாளர்கள் ஏழு பேரை கைது செய்து அவைகளை தயாரிப்பதற்கு அவர்கள் பயன்படுத்திய இயந்திரங்களையும் கைப்பற்றினார்கள். மேற்படி உபகரணங்கள் 2003ஆம் ஆண்டிலிருந்தே ஒரு தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த ரகு என்பவரால்

தயாரிக்கப்பட்டு, ஆந்திரா மாநிலத்திற்கு அனுப்பி வந்ததைக் கண்டறிந்து, அந்த தீவிரவாதியைக் கைது செய்து அவர்களுடைய இயக்கத்தின் சதியை அப்பொழுது முறியடித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து, மாநிலம் முழுவதும் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் தேடுதல் வேட்டை மேற்கொண்டு வந்தனர். இதன் விளைவாக, தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே முருகமலைக் காட்டில், 25.06.2007 அன்று, ஆயுதப்பயிற்சி செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்த ஆறு நக்சலைட்டுகள் மற்றும் அவர்களுக்குத் தஞ்சம் அளித்து வந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்கள். 1992ஆம் ஆண்டு முதல் கொலை, கொள்ளை, குண்டுவெடிப்பு சம்பந்தப்பட்ட பல்வேறு வழக்குகளில் காவல் துறையினரால் 15 ஆண்டுகளாகத் தேடப்பட்டு வந்த முக்கிய நக்சலைட்டு தலைவர் சுந்தரமூர்த்தி 9–7–2007 அன்று கைது செய்யப் பட்டவர்களுள் ஒருவராவார். அவர்களிடமிருந்து சில துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன. விசாரணையில், அத்துப் பாக்கிகள் ஓரிசா மாநிலம், கோராப்பட்டு நகரத்தில் போலீஸ் ஆயுதக்கிடங்கிலிருந்து கொள்ளையடிக்கப் பட்ட சுமார் 500 துப்பாக்கிகளில் சில என்பதும் தெரியவந்துள்ளது.

காவல் துறையினர் தொடர்ந்து கண்காணித்து வந்ததையடுத்து, தேனி மாவட்டம், வருசநாடு மலைப்பகுதியில், சந்தேகப்படும்படியாக சிலர் நடமாடி வருவதாக தகவல் கிடைக்கப்பெற்று, சிறப்பு

அதிரடிப்படையினர் அப்பகுதியில் தேடுதல் வேட்டை மேற்கொண்டு வந்தபோது, 19.12.2007 அன்று, மேற்படி நபர்களைச் சுற்றி வளைத்து, துப்பாக்கிப் பிரயோகம் செய்து, ஐந்து நக்சலைட்டுகளை கைது செய்தார்கள். இதில் நொண்டி பழனி என்பவர் 1980ம் ஆண்டு முதல் தேடப்பட்டு வந்த முக்கிய தீவிரவாதி ஆவார். இதன் மூலம் நக்சலைட் தீவிரவாதிகள் காட்டுப்பகுதியில் தொடங்கப்படவிருந்த பயிற்சி முகாம்களை காவல் துறை முன்கூட்டியே தகவலறிந்து தடுத்துள்ளது.

மேலும், க்யூ பிரிவினர், சேகரித்த தகவலின் அடிப்படையில், 06.12.2007 அன்று திருவள்ளூர் மாவட்டம், சுங்கம்பேடு கிராமத்தில் தங்கி சிகிச்சை பெற்று வந்த, கொலை, குண்டுவெடிப்பு போன்ற ஆறு வழக்குகளில் சமபந்தப்பட்டு, ஆந்திர மாநில காவல் துறையால் தேடப்பட்டு வந்த தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த பிரதாப் என்பவரின் மனைவி கவிதாவை கைது செய்தார்கள்.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மலைப்பகுதியில், திண்டுக்கல் மாவட்ட காவல் துறை மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வந்தபோது, 19.04.2008 அன்று, ஏழாம்பாறை, மூலையாறு ஓடைப்பகுதியில் நக்சலைட்டு தீவிரவாதிகளுடைய நடமாட்டம் இருப்பதாக தெரிந்து, அவ்விடத்திற்கு விரைந்து சென்று பார்த்த போது, அங்கிருந்த சிலர் காவல் துறையினர் மீது துப்பாக்கியால் சுட்டும், கையெறி குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தியுள்ளார்கள். காவல் துறையினர் தற்காப்புக்காகவும்,

அவர்களை கைது செய்வதற்காகவும், எச்சரிக்கை செய்து வானத்தை நோக்கி சுட்டும், அவர்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்தியதையடுத்து, காவல் துறையினர் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள அவர்களை நோக்கி சுட்டதில், அங்கிருந்து தப்பியோடி உள்ளார்கள். அவர்களைப் பிடிக்க முயற்சி செய்து, பிடிக்க இயலாமல் சம்பவ இடத்திற்குச் சென்று பார்க்க, அந்த இடத்தில் நவீன் என்கிற பிரசாத் என்ற நக்சலைட்டு தீவிரவாதி குண்டுக் காயமடைந்து இறந்து கிடந்துள்ளார். இது சம்பந்தமாக வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

காவல் துறையினர் தப்பியோடிய தீவிரவாதிகளை காட்டுப்பகுதியில் தீவிரமாக தேடி வருகின்றார்கள். இறந்து போன நவீன் மூன்று கொள்ளை, கொலை முயற்சி, ஆயுதம் மற்றும் வெடிபொருள் சட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்டு, 2002லிருந்து தேடப்பட்டு வந்த குற்றவாளியாவார்.

இந்த அரசு, பதவி ஏற்ற நாளிலிருந்து மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, தமிழகத்தில் தொடர்ந்து சாதி, சமயப் பூசல்கள் ஏதுமின்றி அமைதி காக்கப்பட்டு வருகிறது. இலங்கையில் நிலவி வரும் பதற்றமான சூழ்நிலையையும், நாட்டில் இருந்து வரும் மதவாத தீவிரவாதிகளின் நடவடிக்கைகளையும், அண்டை மாநிலங்கள் உட்பட பல மாநிலங்களில் வளர்ந்து வரும் தீவிரவாத செயல்களையும் கருத்தில் கொண்டு, தமிழக அரசு மேற்குறிப்பிட்ட தீவிரவாதச் செயல்கள் தமிழகத்தில் நுழையாமல் பார்த்துக் கொள்ளத் தேவையான அனைத்து தடுப்பு நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

காவல் துறையினர் கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் 24 நக்சலைட்டுகளை கைது செய்து, அவர்களில் எட்டு நபர்களை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

ஆனால் கடந்த ஆட்சியில் (மே 2001 முதல் 2006) 11 வழக்குகள் பதிவு செய்து 56 பேர் கைது செய்யப்பட்டும், அதில் எவரும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்படவில்லை என்றாலும் அவர்கள் அப்போது கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகின்றேன்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் போது, 08.05.2002 அன்று, மாவோயிச பொதுவுடைமை நடுவத்தைச் சேர்ந்த கிருஷ்ணப்பா மற்றும் 11 நபர்கள் கிருஷ்ணகிரி மாவட்டம் தளி பஞ்சாயத்துத் தலைவர் வெங்கடேசன் என்பவரை கொலை செய்தார்கள். தர்மபுரி மாவட்டம், சாலை ஜோகிபட்டி கிராமத்தில் ஒரு மாந்தோப்பில் நக்சலைட்டுகள் பயிற்சி முகாம் நடத்துவதாக கிடைத்த தகவலின் பேரில், 24.11.2002 அன்று அ.தி.மு.க. ஆட்சியில் சின்னகனகம்பட்டி கிராமத்தில் க்யூ பிரிவினர் தேடுதல் வேட்டை நடத்தியபோது, நக்சலைட்டுகளுக்கும், காவல் துறையினருக்கும் நடந்த துப்பாக்கி சண்டையில் நக்சலைட்டு சிவா என்ற பார்த்தீபன் சுட்டுக் கொல்லப்பட்டார். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், 25.11.2002 அன்று, கருகம்பட்டி கிராமத்தில் இதேபோன்று நடந்த தேடுதல் வேட்டையின்போது, காவல் துறையினருக்கும், நக்சலைட்டுகளுக்கும் மோதல் ஏற்பட்டு 28 நக்சலைட்டுகள்

கைது செய்யப்பட்டுள்ளார்கள். இம்மோதல்களில் காவல் துறையினர் ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

இதிலிருந்தே கடந்த ஆட்சி காலத்திலும், நக்சலைட்டு தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் இருந்து வந்துள்ளது என்பதும், நக்சலைட்டுகள் பயிற்சி முகாம்களை நடத்த முயன்றுள்ளார்கள் என்பதும், தேடுதல் வேட்டைகளின்போது நக்சலைட்டுகளுக்கும், காவல் துறைக்கும் மோதல்கள் ஏற்பட்டு துப்பாக்கிப் பிரயோகம் நடந்துள்ளது என்றும் தெளிவாகப் புரியும். இதை நான் சொல்கின்ற காரணத்தால் அந்த ஆட்சியில் நடந்தது – இந்த ஆட்சியில் நடைபெறவில்லை என்று வக்காலத்து வாங்கவோ, வாதிடவோ அல்ல. நான் அதற்காகத்தான் தொடக்கத்திலேயே சொன்னேன். இது வெள்ளத்தைப் போல், புயலைப் போல், பூகம்பத்தைப் போல், இயற்கைச் சீற்றம் போல வருகின்ற ஒன்றுதான் இந்தத் தீவிரவாதம். அதை எல்லோரும் கூடித்தான் நாம் எதிர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அதை எப்படி எதிர்ப்பது, அவர்களைப் போலவே ஆயுதம் தாங்கியா? அல்ல. அவர்களைப் போலவே வன்முறையில் ஈடுபட்டா? அல்ல. அவர்கள் ஏன் இந்த நிலைக்கு ஆளானார்கள். நம்முடைய நண்பர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல் அவர்களுக்கு ஏன் படிப்பறிவு இல்லை? படிக்கவில்லை? படிக்காததற்கு என்ன

காரணம்? வசதியில்லை. வசதியில்லாததற்கு என்ன காரணம். அதை ஆழமாக, அந்த ஆணி வேரைத் தோண்டிப் பார்த்து அறிய வேண்டும். அப்படி அறிந்தால், அந்த ஆணி வேர் அகற்றப்பட்டால், அந்தக் காரணத்தைக் கண்டுபிடித்தால் மக்கள் நலமாக வாழ, நல்வாழ்வு வாழ, அமைதியாக வாழ – வருங்கால சமுதாயம் – வாலிபர்கள் – புரட்சிகரமான இளைஞர்களாக மாறாமல், புதிய நாட்டை உருவாக்குகின்ற இளைஞர்களாக மாறுவார்கள். அதற்கு நாமனைவரும் நம்முடைய கடமையைச் செய்ய வேண்டும், அந்தக் கடமை தான் அவர்களுக்குத் தேவை என்ன என்பதை உணர்ந்து, அந்தத் தேவையை நிறைவு செய்கின்ற கடமை என்பதை நான் உணர்த்தி, இந்த அளவில் இந்தக் கருத்துக்கு என்னுடைய விளக்கத்தை அளிக்கின்றேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

இராஜபாளையத்தில் முத்துராமலிங்கத் தேவர் சிலை சேதப் பிரச்சினையில் குற்றச்சாட்டு

சட்டப் பேரவையில் முதல்வர் கலைஞர் விளக்கம்

சட்டப்பேரவையில் 23.4.2008 இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருவல்லிபுத்தூர் தொகுதி உறுப்பினர் ராமசாமி பேசும்போது, முத்துராமலிங்கத் தேவர் சிலை உடைப்புச் சம்பவம் குறித்து தெரிவித்த கருத்தையடுத்து – பேரவையில் அ.தி.மு.க. வினருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினருக்குமிடையே கடும் சர்ச்சை ஏற்பட்டது.

இராஜபாளையத்தில் தேவர் சிலை உடைக்கப் பட்ட சம்பவத்தில் அ.தி.மு.க.வினருக்கு தொடர்பு உள்ளது என சட்டமன்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சிவபுண்ணியம் உறுதிபடத் தெரிவிக்க; சிவபுண்ணியத்திற்கும் அ.தி.மு.க.விற்குமிடையே வாக்குவாதமேற்பட்டது.

அப்போது குறுக்கிட்டுப் பேசிய முதல்வர் கலைஞர் அவர்கள், இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இதுபோன்றதொரு சம்பவம் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் நடைபெற்றதை முன்னுதாரண மாகக் கோடிட்டுக்காட்டி, “அதுபோல், இந்நிகழ்ச்சியை சிவபுண்ணியம் – செங்கோட்டையன் ஆகிய இருவரும் சவாலாக எடுத்துக் கொண்டு நிரூபிக்கலாம்” என விளக்கமளித்தார்.

சட்டபேரவையில் நேற்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திருவில்லிபுத்தூர் இராமசாமி பேசும்போது, இதுபோன்று தேவர் திருமகனார் சிலைகள் உடைக்கப்பட்ட ஓரிரு சம்பவங்களைப் பட்டியலிட்டார்.

அப்போது அவர் "இராஜபாளையத்தில் தேவர் திருமகனார் சிலை உடைக்கப்பட்ட நிகழ்வில் அ.தி.மு.க. காரருக்கு தொடர்பு உண்டு" என குற்றம்சாட்டினார்.

அப்போது அ.தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று அவரை மேலும் பேசவிடாமல் கூச்சலிட்டனர்.

அ.தி.மு.க. கொறடா செங்கோட்டையன் எழுந்து, "இராஜபாளையத்தில் தேவர் சிலை உடைக்கப்பட்டதில் அ.தி.மு.க.காரருக்கு தொடர்பு உள்ளது என்று சொல்லும் குற்றச்சாட்டை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரால் நிரூபிக்கமுடியுமா? அவர் அதனை நிரூபிக்கும் வரை அவர் பேசிய மேற்படி சொற்றொடரை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும்" என வாதிட்டார்.

செங்கோட்டையன் பேசியதை அடுத்து அ.தி.மு.க.வினர் மேலும் பலமாக கூச்சலிட்டனர்.

அப்போது இந்திய கம்யூனிஸ்ட் சட்டமன்றக் கட்சித் தலைவர் சிவபுண்ணியம் எழுந்து, "இராஜபாளையத்தில் தேவர் சிலை உடைப்பு சம்பவத்தில் தொடர்புடையவர் அந்த ஊர் நாட்டாமையின் தம்பியாவார். அவர் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று உறுதிபடக் குறிப்பிட்டார்.

அப்போது செங்கோட்டையன் எழுந்து, "சிவபுண்ணியம் சொல்வது உண்மைக்குப் புறம்பானது. அரசின் கையில் காவல்துறை உள்ளது. அதன்மூலம் இந்தச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் யார் என்பதைத் தெரிந்து கொள்ளமுடியும். வேண்டுமென்றே இப்பிரச்சினையில் அ.தி.மு.க.வினர் மீது குற்றம்சாட்டப் படுகிறது. அது தவறான செய்தி. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும்" என்று மீண்டும் வலியுறுத்தினார்.

இதையடுத்து அ.தி.மு.க.வினர், "சிவபுண்ணியம், இராமசாமி ஆகிய இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் கூறிய சொற்றொடரை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும்" எனக் கடுமையாக கூச்சலிட்டனர்.

அதுபோது பேரவைத் தலைவர், "சிவபுண்ணியம், நீங்கள் சொன்ன குற்றச்சாட்டுக்கு பொறுப்பேற்றுக் கொள்கிறீர்களா" என கேட்டார்.

அப்போது சிவபுண்ணியம் எழுந்து "விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் தொகுதி சங்கரலிங்கபுரம் நாட்டாமையின் தம்பி மணிமுத்துக்கு தேவர் சிலை உடைப்பில் தொடர்புள்ளது. அவர் அ.தி.மு.க.வை சேர்ந்தவர் என்பதை நிரூபிக்கிறேன்" என்றார்.

இதையடுத்து அ.தி.மு.க.வினர் தொடர்ந்து கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது குறுக்கிட்டு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

இதே போன்ற ஒரு சர்ச்சை அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்த போது இந்த அவையிலே உருவாயிற்று. அன்றைக்கு அமைச்சராக இருந்த மறைந்த நண்பர் குழந்தைவேலு அவர்கள் என் மீது ஒரு அவதூறு குற்றச்சாட்டைக் கூறினார். அந்தக் குற்றச்சாட்டு; தேனி மாவட்டம் முத்துத்தேவன்பட்டியில் இப்போது ம.தி.மு.க. உறுப்பினராக உள்ள நண்பர் இராமகிருஷ்ணனு டைய நிலத்தை நான் வாங்கி என் மகன் அழகிரிக்கு எழுதிக் கொடுத்து விட்டேன் என்று சொன்னார். எந்த நேரமென்றால் பெரியகுளம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் கூட்டங்களிலும் சொன்னார்.

அதோடு விடாமல், அந்தத் தேர்தலிலே வெற்றி தோல்வி என்பதில் தோல்வியை நாங்கள் கண்டு வெற்றியை அவர்கள் பெற்று, பின்னர் சட்டப் பேரவையில் அமர்ந்திருந்த போது அதையே திருப்பிச் சொன்னார். நான் கருணாநிதி முத்துத்தேவன்பட்டியில் நிலம் வாங்கியதை நிரூபித்துக் காட்டுவேன் என்று சொன்னார். அப்போது, எதிர் தரப்பு வரிசையிலே அமர்ந்திருந்த தம்பி துரைமுருகன் எழுந்து நிரூபிக்க முடியுமா என்று கேட்டார்.

இப்போது நடைபெறுகின்ற இதே மாதிரி கூச்சல் குழப்பம் எல்லாம் அங்கே நடைபெற்றது. நான் எதிர்தரப்பிலே, எதிர்க்கட்சித் தலைவராக அமர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன். முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களும் அதைக் கவனித்துக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் குழந்தைவேலு சொன்னார் – துரைமுருகன் இப்படி துள்ளுகிறாரே அவருடைய தலைவர் கருணாநிதி

வாய் மூடிக் கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்த்தாலே அது உண்மை என்று தெரிகின்றது அல்லவா என்றார்.

நான் உடனே எழுந்து வீணாக என்னை வம்புக்கு இழுக்காதீர்கள், நீங்கள் ஆதாரம் இருந்தால் கொடுங்கள். நான், முதலமைச்சர் எம்.ஜி.ஆர். என்ன சொல்கிறாரோ அதற்குக் கட்டுப்படுகிறேன். நாளைக்கே அந்த ஆதாரத்தை நீங்கள் கொடுத்தால் நான் இந்தப் பதவியிலிருந்து – ஏன் அரசியலிருந்தே ஓய்வு பெறுகிறேன். நீங்கள் இந்தப் பதவியிலிருந்தாவது ஓய்வு பெறுவீர்களா என்று கேட்ட போது அந்தச் சவாலை அமைச்சர் குழந்தைவேலு ஏற்றுக் கொண்டார்.

அப்போது ராஜாராம் அவர்கள் அவைத் தலைவர். மறுநாளிலிருந்து நான் தினந்தினம் எழுந்து ஆதாரம் கொண்டு வந்தீர்களா, ஆதாரம் கொண்டு வந்தீர்களா என்று கேட்டுக் கொண்டேயிருந்தேன். நாளைக்கு, நாளைக்கு என்று சொல்லிக் கொண்டே இருந்தார். எம்.ஜி.ஆர். அவர்களும் அவரை நம்பி, அவர் நாளைக்கு தருவதாகச் சொல்கிறாரே, எதிர்க்கட்சித் தலைவர் பொறுமையாக இருங்கள் என்று சொன்னார்.

எங்களுக்குள் இருந்த நட்பின் காரணமாக ஏற்பட்ட நம்பிக்கையின் காரணமாக அவர் சொல்வதை நம்பி நான் இருந்தேன். கடைசியாக ஆதாரத்தைக் கொண்டு வந்து கொடுத்தார். அதை நம்முடைய அன்றைய அவைத் தலைவர் ராஜாராம் அவர்கள் வாங்கிப் பார்த்தார். வாங்கிப் பார்த்து விட்டு இங்கிருந்த எல்லாக் கட்சித் தலைவர்களையும் தன்னுடைய அறைக்கு அழைத்து அந்த ஆதாரத்தைக் காட்டினார். ஆனால், அது உண்மையான

ஆதாரம் இல்லை. 'போர்ஜரி' கையெழுத்து போட்டு – நான் கையெழுத்து போட்டதைப் போல – என் மகன் அழகிரி கையெழுத்து போட்டதைப் போல, ஒரு 'போர்ஜரி' பத்திரத்தை அவர் காண்பித்தார்.

இதைக் கண்டு பிடித்த ராஜாராம் அவர்கள் "நீங்கள் சொல்வது தவறு – கருணாநிதி அன்றைக்கு மறுத்தது தான் சரி. ஆகவே, என்னுடைய தீர்ப்பு அவருக்கு சாதகமாக வழங்கப்படுகிறது" என்று அன்றைக்கு இங்கே குறிப்பிட்டார்.

இது அன்றைக்கு நடந்தது. அதிலிருந்து நானும் பார்த்தேன் – அவர் ராஜினாமா செய்வார், ராஜினாமா செய்வார் என்று. நான் எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே கேட்டேன். என்ன எப்போது உங்கள் மந்திரி ராஜினாமா செய்வார் என்று. வழக்கம் போல் அவர் ஜாடை காட்டுவாரே – வாயைப் பொத்தி சும்மா இருங்கள் என்று சொன்னார். நானும் சும்மா இருந்து விட்டேன் எம்.ஜி.ஆர். சொல்கிறாரே என்பதற்காக. இது அப்போது நடந்தது.

இப்போது நடப்பதாக இருந்தால் நாளைக்கே நம்முடைய சிவபுண்ணியம் அவர்களும், நம்முடைய செங்கோட்டையன் அவர்களும் இதை சவாலாக எடுத்துக் கொண்டு யாராவது நிரூபிக்கலாம் – நிரூபிக்கத் தவறினால் அதற்கு என்ன தண்டனை என்பதை இந்த அவையிலே நாமே தீர்மானமாகக் கொண்டு வரலாம்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

விவேகானந்தர் இல்லம் பற்றிய விஷமப் பிரச்சாரம் செல்லாது!

சட்டப்பேரவையில் முதல்வர் கலைஞர் திட்டவட்ட விளக்கம்

செம்மொழி ஆய்வு மையத்திற்காக சென்னை – காமராசர் சாலையிலுள்ள விவேகானந்தர் இல்லம் இடிக்கப்படவுள்ளதாகக் கூறி சட்டப்பேரவையில் 24.4.2008 அ.தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசினர்.

அதற்கு விரிவான விளக்கமளித்து உரையாற்றிய முதல்வர் கலைஞர் அவர்கள், "இல்லாத ஒன்றைப் பற்றி, நடக்கப் போகாத ஒன்றைப் பற்றி இங்கே உறுப்பினர்கள் பேசுவது ஆச்சரியமாக, வேடிக்கையாக உள்ளது" என்று குறிப்பிட்டார்.

"பகுத்தறிவு இயக்கத்தினுடைய கருத்துக்களை, பெரியாருடைய கருத்துக்களை, அண்ணாவினு டைய கருத்துக்களை பெரும் பகுதி எடுத்துக் கூறிய விவேகானந்தரிடம் எங்களுக்கு என்ன விரோதம் இருக்க முடியும்?" என்று பேரவையில் வினா எழுப்பிய முதல்வர் கலைஞர் அவர்கள், 1970ஆம் ஆண்டு தமது தலைமையில் குடியரசுத் தலைவர் வி.வி.கிரி அவர்கள் குமரி முனையில் விவேகானந்தர் நினைவு மண்டபத்தை திறந்து வைத்த நிகழ்வை நினைவு கூர்ந்தார்.

1999ஆம் ஆண்டு தாம் முதலமைச்சராக இருந்தபோது சென்னை – விவேகானந்தர் இல்லத்தில் இந்திய கலாச்சார கண்காட்சியைத் திறந்து வைத்ததையும், அவ்விழாவில் அவ்வமைப் பினர் விடுத்த

வேண்டுகோளையும் சுட்டிக்காட்டி உரையாற்றிய முதல்வர் அவர்கள், அவர்களது கோரிக்கைகளையேற்று அந்நாளில் அரசின் சார்பில் நல்கிய பேருதவிகளையும் ஒன்றன்பின் ஒன்றாகப் பட்டியலிட்டார்.

"எனவே விவேகானந்தர் இல்லம் பற்றிய சிலரது விஷமப் பிரச்சாரம் செல்லாது!" என தமதுரையில் முதல்வர் கலைஞர் எச்சரித்தார்.

விவேகானந்தர் நினைவு இல்லத்தை இடித்து விட்டு அதே இடத்தில் தமிழ் செம்மொழி ஆய்வு மையம் அமைக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படும் கருத்து சட்டப் பேரவையில் நேற்று உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் திர்மானம் கொண்டு வந்தனர். இதனை சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக் கொள்ளப்பட்டு நடைபெற்ற விவாதத்தில் செங்கோட்டையன் (அ.தி.மு.க.), ஞானசேகரன் (காங்கிரஸ்), திருக்கச்சூர் ஆறுமுகம் (பா.ம.க.), என்.இராமகிருஷ்ணன் (ம.தி.மு.க.) செல்வப்பெருந்தகை (விடுதலைச் சிறுத்தைகள்) ஆகியோர் பேசினர்.

இதற்கு பதிலளித்து முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

எதிர்க்கட்சி கொறடா செங்கோட்டையன் அவர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஞானசேகரன் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் ஆறுமுகம் அவர்களும், ம.தி.மு.க. சார்பில் இராமகிருஷ்ணன் அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் செல்வம் அவர்களும் விவேகானந்தர் இல்லம் குறித்த சில கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இதிலே வேடிக்கை என்னவென்றால், இல்லாத ஒன்றைப் பற்றி, நடக்கப் போகாத ஒன்றைப் பற்றி அவர்கள் பேசினார்கள் என்பதுதான் ஆச்சரியப் படக்கூடியது. (மேஜையைத் தட்டும் ஒலி) தம்பி கம்பம் இராமகிருஷ்ணன் விவேகானந்தர் இல்லம் பழைய இடத்திலே இருக்கட்டும், "பழைய இடத்திலே இருப்பது தான் நல்லது" என்று சொன்னார். ஆமாம், "பழைய இடத்தில்" இருப்பதுதான் நல்லது (மேஜையைத் தட்டும் ஒலி) என்பதை நான் தம்பி இராமகிருஷ்ணனுக்கு நினைவூட்டக் கடமைப் பட்டிருக்கிறேன் – அண்ணன் என்ற முறையில்.

விவேகானந்தருக்கு அல்லது அவருடைய நினைவுச் சின்னத்திற்கு சொந்தம் கொண்டாட, அதன் காரணமாகப் பெருமை பெற இங்கே உள்ள அனைவருக்கும் – தமிழகத்திலே உள்ள ஆறு கோடி மக்களுக்கும் உரிமை உண்டு என்றாலும் கூட இன்றைக்கு தென்கோடி முனையிலே இருக்கின்ற கடற்கரையில் – குமரி முனையில் இருக்கின்ற விவேகானந்தர் ஆலயத்தை வி.வி.கிரி அவர்கள் 1970 ஆம் ஆண்டு என்னுடைய தலைமையிலேதான் திறந்து வைத்தார்கள் என்பதை நான் இங்கே ஞாபகப் படுத்த விரும்புகின்றேன். 2.9.1970 அன்று திறந்து வைக்கப்பட்ட அந்த மண்டபம் அது. அப்போது அந்த மாவட்டத்து மக்களால் சில பிரச்சினைகளுக்கெல்லாம் உள்ளாகி இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்தவர்கள் – விவேகானந்தருடைய போதனைகளைப் பரப்புகின்ற வர்கள், அவர்களுக்கு ஏற்பட்ட சங்கடங்களை என்னிடத் தில் எடுத்துச் சொல்லி அவைகளையெல்லாம் அன்றைக்கு ஆட்சியின் சார்பில் தீர்த்து வைத்தவனும் நான் தான்.

அதன் பிறகு, இந்தப் பிரச்சினை இப்போது. சென்னை மாநகரத்தில் 1897–ஆம் ஆண்டில் 9 நாட்கள்

தங்கியிருந்து விவேகானந்தர் விரிவுரைகள் செய்த காரணத்தினால், அதன் நினைவாக விவேகானந்தர் இல்லத்தை, சென்னை இராமகிருஷ்ண மடத்திடம் ஒப்படைக்கும்படி அந்த மடத்தின் தலைவர் இந்த அரசிடம் கோரியிருந்தார். சென்னை காமராஜர் சாலையில் உள்ள 27 ஆயிரத்து 546 சதுர அடி பரப்பளவு கொண்ட விவேகானந்தர் இல்லத்தில் அவருடைய நினைவாக அந்த இடத்தை அரசு அந்த மடத்திற்கு ஒப்படைக்க வேண்டும் என்று கேட்கப்பட்ட போது 24.2.1997 நாளிட்ட உயர்கல்வித் துறையின் அரசாணை எண். 89–ன்படி சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அந்த இல்லம் முதன்முதலாக இராமகிருஷ்ண மடத்திடம் குத்தகை அடிப்படையில் மூன்றாண்டு காலத்திற்கு – ஆண்டொன்றுக்கு குத்தகைத் தொகை ஆயிரம் ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டது.

விவேகானந்தர் இல்லத்திற்கு நுழைவு வழி இல்லை எனக் கூறி, அந்த இல்லத்தின் முன்னுள்ள 8 கிரவுண்ட் 1928 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலத்தையும் குத்தகைக்கு அளிக்கும்படி இராமகிருஷ்ண மடம் கோரியதை அடுத்து அதையும் தி.மு.கழக அரசு பரிசீலனை செய்து, 90 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நிலத்தையும் மூன்றாண்டு கால குத்தகைக்கு ஆண்டொன்றுக்கு ஆயிரம் ரூபாய் குத்தகைத் தொகை என 10.6.1998 நாளிடப்பட்ட வருவாய்த் துறை அரசாணை எண். 487–ன்படி வழங்கப்பட்டுள்ளது. இது தான் அந்த கட்டிடத்திற்கான பழைய வரலாறு.

இந்த இடத்தினுடைய மற்றொரு கோரிக்கையாக, இதை 30 ஆண்டுக்கு குத்தகைக்குத் தர வேண்டும் என்று அவர்கள் கேட்டபோது நான் அதுபற்றி அமைச்சரவைக் கூட்டத்தில் தான் விரிவாக விவாதித்து முடிவெடுக்க

வேண்டும் என்று கூறி விவேகானந்தர் இல்லத்தின் சந்தை மதிப்பு 2 கோடி ரூபாய்க்கு மேல் இருப்பதால், சலுகைக் குத்தகையாக மாதம் ஒன்றுக்கு ஒரு சதுர அடிக்கு ஒரு ரூபாய் வீதம் குத்தகைத் தொகையாகவும், குத்தகைக் காலத்தை 10 ஆண்டுகள் என்றும் நிர்ணயம் செய்ய முடிவெடுக்கப்பட்டு, அந்த முடிவையொட்டி 28.1.2000 நாளிடப்பட்ட உயர்கல்வித் துறை அரசாணை எண். 20 வெளியிடப்பட்டது. இதெல்லாம் ஆதாரபூர்வமான தேதிவாரியான விவரங்கள்.

ஏதோ விவேகானந்தர் இல்லத்திலே உள்ளவர்களுக்கும் தி.மு.கழக அரசுக்கும் தகராறு என்பதைப் போல் பத்திரிக்கைகள் எழுதி – நேற்றைக்கு கூட ஒரு பத்திரிக்கையில் "விவேகானந்தர் இல்லத்தை அபகரிக்க தி.மு.க. ஆட்சி முயற்சி" என்று பெருந்தலைப்பே இட்டிருக்கிறார்கள். அதை ஏன் அபகரிக்க வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. விவேகானந்தரிடத்திலே எங்களுக்கு ஏதாவது பகையா என்றால் இல்லை. இன்னும் சொல்லப் போனால், பகுத்தறிவு இயக்கத்தினுடைய கருத்துக்களை, பெரியாருடைய கருத்துக்களை, அண்ணாவுடைய கருத்துக்களைப் பெரும்பகுதி எடுத்துக் கூறுபவர் விவேகானந்தர் என்கிற போது எங்களுக்கு விவேகானந்தரிடத்திலே என்ன விரோதம் என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

20.12.1999 அன்று அப்போது நான் முதலமைச்சராக இருந்த போது சென்னையிலே உள்ள விவேகானந்தர் இல்லத்திற்கு நான், நம்முடைய நிதியமைச்சர் பேராசிரியர், அமைச்சர்களாக இருந்த ஆர்க்காடு வீராசாமி, துரைமுருகன் ஆகியோரும் சென்று அந்த இல்லத்திலே இந்திய கலாச்சார கண் காட்சியையும் திறந்து வைத்தேன்.

அந்த இல்லம் இருந்த இடத்திற்குப் பெயர் "ஐஸ் ஹவுஸ்". அந்த நிகழ்ச்சியில் ஸ்ரீ மத் சுவாமி ஸமரணானந்தஜி மகராஜ் எங்களை வரவேற்றுப் பேசினார். வரவேற்றுப் பேசும் போது அந்த இடத்தை முழுமையாகத் தங்களுக்கே கொடுத்து விட வேண்டும் என்பதைப் போலவும், 90 வருடம், 30 வருடம் "லீஸ்" என்பார்களே அப்படிக் கொடுத்துவிட வேண்டும் என்பதைப் போலவும் பேசினார்கள். அங்கே நன்றி கூறிய சிலரும் அதே கருத்தை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் நான் சட்டப்படி எதுவும் செய்ய வேண்டும் என்பதிலே நம்பிக்கை உள்ளவன் என்ற காரணத்தினால் நான் பேசும் போது சொன்னேன் – "அறிக்கை படித்தவர்கள், வரவேற்புரை ஆற்றியவர்கள், நன்றியுரை ஆற்றிய நண்பர் உள்ளிட்ட அனைவரும் இந்த இல்லத்தை விவேகானந்தர் இந்திய கலாச்சாரக் கண்காட்சிக்கு நான் ஒப்படைத்து விட்டதாகவே சொல்லி, அதை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். நான் ஒரு முக்கியமான பொறுப்பிலே இருப்பவன். உள்ளத்திலே நல்ல நினைவுகள் இருந்தாலும் கூட, அதை ஒழுங்காக, முறையாக, சட்டரீதியாக செயல்படுத்த வேண்டு மென்பதிலே அக்கறை உள்ளவன். எனவே இன்றைக்கு இந்தக் கட்டிடத்தை ஒப்படைத்து விட்டதாக நீங்கள் கூறுவதை நான் உடனடியாக ஏற்க இயலாது. ஒப்படைப்பதைப் பற்றி நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். ஒருவரே இதில் யோசிப்பது என்பது இயலாது. எனவே எங்களுடைய அமைச்சரவை அதைப்பற்றி யோசித்து ஒரு நல்ல முடிவை எடுக்கும்" என்று குறிப்பிட்டேன்.

இன்னும் சொன்னேன் – "எல்லோரும் என்னை இங்கே எதற்கோ புகழ்ந்து புகழ்ந்து பேசினார்கள். ஆரம்பத்திலேயே கட்டிடம் வழங்குவதற்காக வழி

வகுத்தவர் நம்முடைய கல்வி அமைச்சர் பேராசிரியர் என்பதையும் கோடிட்டுக் காட்டினார்கள். ஒரு விழாவிலே பேராசிரியர் கலந்து கொண்டு பேசும் போது "பரிசீலிக்கப்படும்" என்று சொல்லியிருக்கிறார். அதையும் கோடிட்டுக் காட்டினார்கள். இவர்களெல்லாம் எங்களைப் புகழ்ந்து பேசும்போது எனக்கொரு நினைவு – இந்த கட்டிடத்திற்குப் பெயரே "ஐஸ் ஹவுஸ்" – அவ்வளவு தான் என்னால் சொல்ல முடியும்" என்று குறிப்பிட்டு (சிரிப்பு) விட்டு மேலும் அந்த விழாவில் நான் பேசும்போது,

"இங்கே நம்முடைய கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல் விவேகானந் தருடைய மொழிகளை – கருத்துக்களை விவேகானந் தரைப் போல் அவருக்கு முன்பு இருந்தவர்கள், பின் வந்தவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களையெல்லாம் இன்றைக்கு செயல் படுத்துகின்ற அரசாக தி.மு.கழக அரசு இருக்கின்ற காரணத்தினால்தான் விவேகானந்தருடைய நினைவைப் போற்றும் இல்லமாக இந்த இல்லத்தை அமைக்க மூன்றாண்டு காலத்திற்கு ஒப்பந்தமாக எங்களிடம் இந்த இடத்தைத் தாருங்கள் என்று கேட்ட போது, அட்டியின்றி உடனடியாக இது வழங்கப்பட்டது. விவேகானந்தர் என்ற தனி மனிதர் மீதல்ல, அவருடைய கருத்துக்கள் எங்களுடைய தலைவர்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் தந்த கருத்துக்களோடு ஒத்து வருகின்ற காரணத்தால் எங்கள் கருத்துக்களுக்கு மேலும் மெருகூட்டுகின்ற வகையில், வலுவூட்டுகின்ற வகையில் இருக்கின்ற காரணத்தால், எங்கள் கருத்துக்களை, அவைகளைத் துணையாகக் கொண்டு பரப்ப முடியும் என்கிற காரணத்தால் நானும் என் அமைச்சரவையிலே உள்ளவர்களும் விவேகானந்த ரிடத்திலே பரிவும் பற்றும் கொண்டிருக்கிறோம்" என்று தான் அன்றைக்கே குறிப்பிட்டேன்.

இது வரையிலே, இங்கே சொல்லப்பட்டதைப் போல, செங்கோட்டையன் எடுத்துக் காட்டியதைப் போல விவேகானந்தர் இல்லம் பற்றி நோட்டீஸ் எதுவும் அனுப்பப்படவில்லை, கடிதமும் எழுதவில்லை. மத்தியிலேயிருந்து எங்களுக்கு வந்த தகவல் செம்மொழியாகத் தமிழை ஆக்கி அதைப் பரப்பவும், ஏற்ற முறையில் அதற்கான வழிவகைகளைக் காணவும், அதற்காக அமைக்கப்பட்டிருக்கின்ற "ஐம்பெருங்குழு", "எண்பேராயம்" போன்ற அமைப்புக்கள் செயல்படவும் 76 கோடி ரூபாய் உங்களுக்காக ஒதுக்கப்படுகிறது. அதற்கு நீங்கள் ஒரு கட்டிடம், ஒரு அமைப்பு இவைகளை யெல்லாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றபோது தற்காலிகமாக ஒரு இடத்தைத் தேடலாம் என்று எண்ணி அதைத் தேடிய நேரத்தில் சோளிங்கநல்லூரிலே ஒரு நிரந்தரமான கட்டிடத்தை பிறகு கட்டுவது என்று அதற்கான முனைப்பான முயற்சிகளிலே ஈடுபட்ட போது, தற்காலிகமாக ஏதாவது அரசுக்குச் சொந்தமான இடங்கள் கிடைக்குமா என்று எண்ணிய நேரத்திலே யாரோ ஒரு கதை கட்டி ஏதேதோ கதை கட்டி, அது பலிக்காத காரணத்தால் இவர்களைச் சாமியார் பக்கம் தள்ளி விடுவோம் என்று இன்றைக்கு சாமியார்களிடம் மோத விடுவதற்காக சில காரியங்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். நீங்கள் சாமியாரிடத்திலே மோத விட்டாலும், மாமியாரிடத்திலே மோத விட்டாலும் நாங்கள் யாரும் அவைகளையெல்லாம் புரிந்து கொள்ளாமல் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

கட்டிடத்தைத்தான் எடுக்கப்போவதில்லையே, ஏன் இவ்வளவு நேரம் எல்லோரும் பேசுவதற்கு இடம் கொடுத்துக் கொண்டாய் என்று கேட்பீர்கள். எனக்கு ஒரு ஆசை –

விவேகானந்தரைப் பற்றி நம்முடைய தலைவர்கள் எல்லாம் பேசிக் கேட்க வேண்டும் என்பதற்காகத் தான் எல்லோரும் பேச அது இங்கே பரவ வேண்டும், ரொம்ப நாளாகி விட்டது விவேகானந்தரைப் பற்றி பேசி என்பதற்காக – அவர் மூட நம்பிக்கைகளையெல்லாம் சாய்த்தவர் – மத வெறிக்கு ஆளாகாதவர் – ஜாதி வெறியைச் சாய்த்தவர் – அப்படிப்பட்ட புரட்சிக்காரர் விவேகானந்தர் என்ற காரணத்தாலும், அவர் இறைச்சி உணவு அருந்தக் கூடியவர், புகை பிடிக்கக் கூடியவர் – இவையெல்லாம் தன்னை ஒன்றும் செய்யாது மனம் சுத்தமாக இருந்தால் என்று எண்ணி சீர்திருத்த நோக்கங்களோடு செயல்பட்டவர். அப்படிப்பட்ட விவேகானந்தருடைய பெயரால் இருக்கின்ற அந்த மண்டபத்தை இடிக்கப் போகிறோம் என்று சில அவசரக்காரர்கள் எழுதியிருக் கிறார்கள். பாருங்கள், இடிக்கக் கூடிய மண்டபமா அது? இடிக்கக் கூடிய அளவிற்கு அவ்வளவு வலுவிழந்த மண்டபமா? இல்லை; வலுவான மண்டபம். அதை யாரும் இடிக்க விரும்பவுமில்லை, நினைக்கவுமில்லை, அதற்காக அந்தப் பக்கம் திரும்பவுமில்லை.

"அந்த மண்டபத்தை தொட்டால் நாங்கள் சட்டப்படி சந்திப்போம், முறைப்படி தான் நடக்கிறோம்" என்று அந்த மடத்தினுடைய பெரிய சாமியார் கூட சவால் விட்டிருக்கிறார். நான் அந்த சவால்களுக்கெல்லாம் பயப்படவில்லை. அது வேறு விஷயம். ஆனால், சாதுக்கள் சவால் விடுகின்ற அளவிற்கு வரக்கூடாது. அது விவேகானந்தருடைய கொள்கைக்கே – அவருடைய குருநாதர் இராமகிருஷ்ண பரமஹம்சர் அவர்களுடைய கொள்கைக்கே விரோதமானது. இந்த அரசைப் பார்த்தா சவால் விடுவது. குமரிமுனையிலே அவ்வளவு பெரிய கோபுரம் கட்டி, மண்டபம் அமைத்து,

இங்கே விவேகானந்தருடைய மண்டபத்தை போஷித்துப் பாதுகாத்து வருகின்ற இந்த அரசைப் பார்த்து சவால் விடுவது நல்லதல்ல, சாந்தம் பெறுங்கள். இதிலாவது விவேகானந்தருடைய விவேகமான பொன்மொழியைப் பின்பற்றுங்கள் என்று அவர்களைக் கேட்டுக் கொண்டு இதை இடிப்பதாகவோ அல்லது பழைய இடத்திலிருந்து புதிய இடத்திற்கு செல்வதாகவோ எந்தப் பிரச்சினையும் இல்லை. இருப்பதெல்லாம் அப்படியே இருக்கும் என்ற உண்மையை உங்களுக்குச் சொல்லி வீணாக நாம் அலட்டிக் கொள்ள வேண்டாம், பிரச்சினையைப் பெரிது படுத்த வேண்டாம், இந்த அரசைப் பொறுத்த வரையில் நாங்கள் தேடிய வரையிலே தற்காலிகமாக எங்களுக்குக் கிடைத்திருக்கிற இடம் அதே காமராஜர் சாலையில் "பாலாறு இல்லம்" – அந்தப் பாலாறு இல்லத்தில், சோளிங்கநல்லூரில் எங்களுக்கு அந்தப் பெரிய கட்டிடம் அமைகின்ற வரையில் தற்காலிகமாக செம்மொழி மையம் இங்கே இடம் பெறும், செம்மொழி நிறுவனம் பாலாறு இல்லத்தில் நடைபெறும் என்பதைத் தெரிவித்து அமைகின்றேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியம்: எந்தத்துறையின் கீழ் இயங்குவது என்பதை முடிவு செய்ய அவகாசம் தேவைப்படுகிறது

சட்டப் பேரவையில்

முதல்வர் கலைஞர் அறிவிப்பு

சட்டப்பேரவையில் 25.4.2008 இந்து சமய அறநிலையத்துறை மற்றும் தொழிலாளர் நலத்துறைகளின் மானியக்கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு மார்க்சிஸ்ட் உறுப்பினர் கோவிந்தசாமி பேசுகையில் அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியத்தை வருவாய்த் துறையில் சேர்த்ததை மீண்டும் தொழிலாளர் நலத்துறையில் சேர்த்திட வேண்டும் என்று குறிப்பிட்டு பேசுகையில் முதல்வர் கலைஞர் அவர்கள் குறுக்கிட்டு விளக்கமளிக்கையில் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியம் எந்தத் துறையின் கீழ் இயங்குவது என்பது குறித்து முடிவு செய்ய அவகாசம் தேவைப்படுகிறது என்றும் இது குறித்து அமைச்சர்கள் – தலைவர்கள் – பிரதிநிதிகள் மட்டத்தில் பேசி முடிவு காண்போம் என்றும் குறிப்பிட்டார்.

சட்டப் பேரவையில் நேற்று இந்து சமய அறநிலையத் துறை மற்றும் தொழிலாளர் நலத் துறைகளின் மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்று பேசிய உறுப்பினர்களில் சிலர் அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியம் குறித்து சில கருத்துக் களைத் தெரிவித்தனர். குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கோவிந்தசாமி பேசும் போது, தொழிலாளர் நலத் துறையில் கழக அரசு கொண்டு வரும் பல நன் முயற்சிகளைப் பாராட்டியும் வரவேற்றும் பேசினார். அடுத்து அவர் அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியத்தின் பல

பிரிவுகள் வருவாய்த் துறையின் கீழ் செயல்படும் என்று அண்மைக் காலத்தில் அரசு அறிவித்துள்ளது. வருவாய்த் துறையினருக்கு ஏற்கனவே அரசின் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்த வேண்டிய பணி பளு இருக்கின்றது. இந்நிலையில் அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியத்தைச் சேர்ந்த லட்சக்கணக்கான தொழிலாளர் பிரச்சினைகளையும் வருவாய்த் துறையினர் சேர்ந்து பார்க்கும் பொழுது அவர்களால் பணிகளை சரிவர செய்ய முடியாது. எனவே இவ் வாரியங்கள் தொழிலாளர் நலத் துறையிலே இருக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து அது குறித்து விரிவாக பேசிக் கொண்டிருந்தார். அப்போது குறுக்கிட்டு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசினர்.

அதன் விபரம் வருமாறு:–

முதல்வர் கலைஞர் :– அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்கள் எந்தத் துறையின் கீழ் இயங்குவது என்ற பிரச்சினை குறித்து போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடந்து, இன்று சட்டப் பேரவையிலும் காலையிலிருந்து இது வரையிலே தொடர்ந்து பேசப்பட்டு வந்துள்ளது. அவையின் முன்னவர் பேராசிரியர் அவர்களும் இதற்கு விளக்கம் தந்திருக்கிறார். துறையின் அமைச்சரும் இதைப் பற்றி விளக்கம் கூறியிருக்கிறார். இதற்கிடையே வெளி நடப்பும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியால் நடத்தப் பட்டிருக்கிறது. நான் ஜனநாயக ரீதியில் அவர்களை யெல்லாம் மதிக்கிறேன், வரவேற்கிறேன். ஆனால் ஒன்று, இப்போது நடைபெறுகின்ற தொழிலாளர் துறையின் சார்பாக நடைபெறுகின்ற இந்த இயக்கம் – அதாவது நான் இயக்கம் என்று குறிப்பிடுவது – அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களைச் சொல்கிறேன் – அந்த இயக்கம் என்னென்ன வகையில் தவறுகளை

வேண்டுமென்றே அல்லது தெரிந்தே இழைக்கிறது என்பதை விவாதித்து எடுத்துக் கூற நான் விரும்பவில்லை. விவாதிப்பதற்கு இப்போது நேரம் போதாது – இடமும் சரியல்ல. அதனால் அதை அமைச்சர்கள் மட்டத்திலும், தொழிற்சங்கத் தலைவர்கள் மட்டத்திலும், அமைப்பு சாரா தொழிலாளர்களின் பிரதிநிதிகள் மட்டத்திலும் விவாதித்து ஒரு முடிவுக்கு வருவது நல்லதென்று கருதுகிறேன். இப்போது தொழிலாளர் துறை மாத்திரமே இதைக் கவனிக்க முடியுமா என்ற அந்தக் கேள்விக்கு வெளி நடப்பு செய்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வெளியிடப் பட்ட தட்டச்சு செய்யப்பட்ட அறிக்கையிலே ஒரு வாசகத்தை இணைத்திருக்கிறார்கள். தொழிலாளர் நலத் துறையில் கூடுதலாக தேவைப்படும் பணியாளர்களை நியமித்து அந்த நல வாரியங்களின் பணிகளை தொழிலாளர் நலத்துறையே தொடர்ந்து நடத்திட வேண்டும் என்பதே தங்களுடைய வேண்டுகோள், கோரிக்கை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதற்கு அதிக காலம் ஆகும் என்று சொல்ல முடியாவிட்டாலும் – மிக விரைவில் நாளைக்கே அதை நாங்கள் ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்த முடியும் என்பதற்கு அவகாசம் இல்லை. அதற்கு நீங்கள் அவகாசம் தரவேண்டும். அந்த அவகாசம் தருகின்ற வரையில் ஆர்ப்பாட்டங்கள் – போராட்டங்கள் இவைகளை ஒத்தி வைக்க வேண்டும். நாங்களும் அதைப் பற்றிச் சிந்திப்பதற்கு – நீங்கள் அவகாசம் தர வேண்டும். இதற்கிடையே ஒன்றை மறந்து விடக் கூடாது. இன்றைக்கு இந்த அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் – ஆங்கிலத்தில் சொல்வார்களே "ட்யூபிலிகேஷன்" என்று அப்படி பல உறுப்பினர்கள் – பல வாரியங்களில் – வெளிநாடுகளிலே இருந்து கொண்டே கூட, பக்கத்திலே

உள்ள நாடுகளிலே இருந்து கூட – லட்சக் கணக்கானவர்கள் உறுப்பினர்களாக ஆகியிருக்கிறார்கள். அவர்களுக்கும் சேர்த்து இந்த நல வாரியங்கள் பயனளிக்கக் கூடிய அளவிற்கு நம்மிடத்திலே பொருளாதார வசதியும் இல்லை. அது நல்ல நிலையை நல்ல நாணயத்தை நாம் எந்தக் குறிக்கோளுக்காக இதை ஆரம்பித்திருக்கிறோமோ அதை நிறைவேறச் செய்யாது என்ற அச்சமும் எங்களுக்கு இருக்கிறது. நிச்சயமாக "ட்யூபிலிகேஷன்" வராததற்கு நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறோம் என்று தொழிற் சங்கத்தின் தலைவர்கள் உறுதி சொல்வார்களேயானால் – உத்தரவாதம் அளிப்பார்களேயானால் – இதைப்பற்றி நிச்சயமாக சிந்தித்து நல்ல முடிவை உங்கள் விருப்பம் போல் செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவிந்தசாமி (சி.பி.எம்) :– முதலமைச்சர் அளித்திருக்கும் விளக்கத்தை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். நிச்சயமாக அதிலே நடைபெறுகின்ற தவறுகள் தொடர வேண்டுமென்று நாங்கள் என்றைக்கும் விரும்பியதும் இல்லை, கருதியதும் இல்லை. அது தடுக்கப்பட வேண்டும். அது முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதிலே உங்களோடு நாங்களும் ஒத்தக் கருத்தோடுதான் இருக்கிறோம். முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல இதற்கான மாற்று வழி என்ன என்பதை நீங்கள் சொன்னது போல் தொழிற்சங்கத் தலைவர்கள், துறை சார்ந்த அதிகாரிகள், அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களையெல்லாம் கலந்து பேசி ஒரு நல்ல முடிவு எடுக்கப்படும் என்று அறிவித்திருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

சாதிக் கொடுமைகளிலிருந்து மக்களைக் காத்திட அனைவரும் ஒத்துழைப்புத் தாரீர்!

மதுரை மாவட்டம் – உத்தபுரத்தில் இரு சமூகத்தினர் வாழும் பகுதியில் இருந்த தடுப்புச் சுவரை இடித்து, பாதை ஏற்படுத்தப்பட்டது குறித்து சட்டப்பேரவையில் **6.5.2008** நடைபெற்ற விவாதத் திற்கு பதிலுரை வழங்கிய முதல்வர் கலைஞர் அவர்கள், "சாதிக் கொடுமையிலிருந்து மக்களைக் காக்க அனைவரும் ஒத்துழைப்புத் தாரீர்!" என வேண்டுகோள் விடுத்தார்.

மேலும், முதல்வர் உரையாற்றுகையில், "யார் வேண்டுமானாலும் அந்தப் பாதையிலே செல்லலாம் என்ற அளவிற்கு ஒருபாதையை உருவாக்கி, பாதையும் இருக்கட்டும், பாதுகாப்பிற்கு அந்தச் சுவரும் இருக்கட்டும் என்ற முறையில், அங்கே இருபகுதியிலும் வாழ்கின்ற மக்கள் சகோதரர்களாக, உடன்பிறப்புகளாக வாழட்டும்!" என்றும் குறிப்பிட்டார்.

சட்டப் பேரவையில் நேற்று கேள்வி நேரம் முடிவுற்றதும் – தமிழக செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் பரிதி இளம்வழுதி – மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகில் உத்தபுரம் கிராமத்தில் இரு சமூகத்தினர் வாழும் பகுதியில், இடையே இருந்த தடுப்புச் சுவரை இடித்துவிட்டு இரு சமூகத்தினரும் சென்றுவரும் வகையில் பாதை ஏற்படுத்தப்பட்டதற்கு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

அவரைத் தொடர்ந்து, அதன் மீதான விவாதத்தில் நன்மாறன் (மார்க்சிஸ்ட்), ஜி.கே.மணி (பா.ம.க.), டி.சுதர்சனம் (காங்கிரஸ்), செல்வப் பெருந்தகை (விடு தலைச் சிறுத்தைகள்), சிவபுண்ணியம் (இந்திய கம்யூ னிஸ்ட் கட்சி), துரைராஜ் (அ.தி.மு.க.) ஆகியோர் பேசினர்.

அதனைத் தொடர்ந்து முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

மதுரை மாவட்டத்தில் உத்தபுரம் பகுதியில் உருவாகி யுள்ள ஒரு பிரச்சினை குறித்து கடந்த சில நாட்களாக தமிழகத்திலே உணர்ச்சி அலைகள் அலை மோதிக் கொண்டிருப்பதை நாம் அனைவரும் மிக நன்றாக அறிவோம். அந்தப் பிரச்சினை கடைசி கட்டத்தில் இப்பொழுது ஜாதி மோதல் என்ற நிலை பெற்று அந்த உரு மாற்றத்தின் காரணமாக தமிழகத்திலே யாரும் எதிர் பார்த்த அளவிற்கு மோதுதல்கள் உருவாகி விடுமோ என்ற அச்சத்தை நமக்கெல்லாம் விளைவித்த நேரத்தில் ஒரு சுமூகமான சூழ்நிலை இன்றைக்கு அரும்பி இருக் கிறது என்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சியளிக்கக் கூடிய ஒன்றாகும்.

ஆனாலும், அ.தி.மு.க. நண்பர் துரைராஜ் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல இரு சாராரும் ஒருமித்த கருத்தோடு இந்த உடன்பாட்டை ஏற்றுக் கொண்டிருக் கிறார்கள் என்று சொல்ல முடியாது. பெரும்பான்மை யோர், அதாவது ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட ஆதி திராவிட மக்கள், தாழ்த்தப் பட்டோர் என்று புறக்கணிக் கப்பட்ட மக்கள் இந்தச் சுவர் இருப்பது அவமானச் சின்னம் என்று கருதி அந்தச் சுவரை இடிக்க வேண்டும் என்று ஆவேசத்தோடு கூறவும் – அதை இடிப்பதை நாங்கள்

அனுமதிக்க மாட்டோம் என்று இன்னொரு சாராரான ஆதி திராவிடர் அல்லாத சமுதாயத்தினரும் கூறவுமான ஒரு சூழ்நிலையில் வடக்கே இருந்தெல்லாம் கூட சீர்திருத்த நோக்கம் கொண்ட கட்சிகளைச் சேர்ந்தவர்கள், தலைவர்கள் ஆச்சர்யத்தோடு இதை உற்று நோக்கி நேரிலே இதைப் பார்க்க வேண்டும் என்றெல்லாம் வட புலத்திலே உள்ள பத்திரிக்கைக்காரர் களெல்லாம் ஆவல் கொண்ட இந்தத் தருணத்திலே தான் நான் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தொடர்பு கொண்டு விரிவாகப் பேசினேன். அவர்கள் இந்த விவரங்களைச் சொன்னார்கள்.

நண்பர் துரைராஜ் அவர்கள் சொன்னதைப் போல சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட கலவரத்தின் தொடர்ச்சியாக எழுந்ததுதான் அந்தச் சுவர் என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆனால், 20 ஆண்டுகளுக்கு முன்பு ஏதோ ஒரு நாள் மாத்திரம் நடந்து முடிந்துவிட்ட கதை அல்ல, அது தொடர்கதையாகவே அவ்வப்பொழுது இது போன்ற பிரச்சினைகள், கலவரங்கள், மோதுதல்கள் அந்த வட்டாரத்திலே அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இதற்கு முன்பே கூட, பெரும் பெரும் கலவரங்களெல்லாம் தமிழகத்தினுடைய தென் பகுதியிலே ஏற்பட்டதும், இரத்த வெள்ளம்; குளங் களிலும், ஆறுகளிலும், வாய்க்கால்களிலும் ஓடியதும், அதிலே தலைகளெல்லாம் மிதந்ததும் இதே மாமன்றத் திலே உறுப்பினர்களால் எடுத்துக் கூறப்பட்ட செய்திகள் தான்.

அவைகளையெல்லாம் கடந்து ஒரு அமைதியான சூழ்நிலையை இன்றைக்கு நாம் காண்கிற நேரத்தில் மீண்டும் அத்தகைய கலவரங்கள் விளைய வேண்டுமா என்ற கவலையின் காரணமாகத்தான் இதைப் பற்றி

மாண்புமிகு உறுப்பினர்கள் – அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, நாட்டில் கலவரமற்ற அமைதியான ஒரு சூழ்நிலை வேண்டும் என்ற அக்கறை கொண்ட காரணத்தினால் இதை எடுத்துச் சொல்லி – என்னுடைய கவனத்திற்கும் அந்தத் தகவல் வந்து – அது பத்திரிக்கை களிலும் பரபரப்பாகப் பேசப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரோடு நான் தொடர்பு கொண்டபோது அவரிடத்திலே நான் சொன்ன யோசனைதான் இது.

ஒரு சாரார் சுவரை இடிக்கவே விட மாட்டோம் என்கிறார்கள். இன்னொரு சாரார் இடித்தே தீருவோம் என்கிறார்கள். இருவருடைய வாதம் என்ன? எந்த அடிப்படையிலே இதைக் கேட்கிறார்கள் என்ற போது – எங்களுக்குப் பாதை வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். இன்னொரு சாரார் எங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும் ஆகவே இந்தச் சுவர் இருக்க வேண்டும் என்கிறார்கள்.

நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் "பாதையும் கொடுங்கள், பாதுகாப்பும் கொடுங்கள்." என்று சொன்னேன். பாதையைக் கொடுப்பதற்கு அடையாள மாகத்தான் அந்த நீண்ட உயர்ந்த சுவரில் பெரிய நிலைவாசல் ஒன்றை தோற்றுவித்து அந்த வழியாக யார் வேண்டுமானாலும் போகலாம் – எப்படி இன்று ஆலயங்களில் யார் வேண்டுமானாலும் அர்ச்சனை செய்யலாம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்து (மேஜையைத் தட்டும் ஒலி) அதை நிறைவேற்றி நடை முறைப்படுத்தியிருக்கிறோமோ அதைப் போல – பகவான் சன்னிதானத்திற்கே யார் வேண்டுமானாலும் போகலாம் என்றால் ஒரு சுவருடைய பாதையிலா செல்லக் கூடாது.

ஆகவே, யார் வேண்டுமானாலும் அந்தப் பாதையிலே செல்லலாம் என்ற அளவிற்கு ஒரு பாதையை உருவாக்கி, பாதையும் இருக்கட்டும், அந்தச் சுவரும் இருக்கட்டும் பாதுகாப்பிற்கு என்ற முறையில் அங்கே இரு பகுதியிலும் வாழ்கின்ற மக்கள் சகோதரர்களாக, உடன்பிறப்புகளாக வாழட்டும் என்று அவர்களுக்கு கூறப்பட்டிருக்கிறது.

நான் கேள்விப்பட்டேன். அதிலே கோபம் கொண்ட உயர் வர்க்கத்தார் என்று தங்களைக் கூறிக் கொள்பவர்கள் – உயர் வர்க்கத்தாரா, தாழ்ந்த வர்க்கத்தாரா என்பது அவர்களது மனோநிலையைப் பொறுத்ததே தவிர, ஜாதியிலே ஒன்றும் – "இறைச்சி தோலிலே இலக்க மிட்டிருக்கிறதா?" என்று சிவவாக்கியர் கேட்டாரே, அதைப் போல யாருடைய உடலிலும் இறைச்சியிலோ, தோலிலோ இலக்கமிட்டு, இவர் இன்ன ஜாதி, இவர் இன்ன ஜாதி என்று இல்லை, எல்லோரும் சமம் தான். அந்த நிலையில் இதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறுதியிட்டு கூறப்பட்ட பிறகு ஆடவர்கள் சில பேர் – உயர் ஜாதிக் காரர்கள் என்று தங்களைக் கருதிக் கொண்டிருக்கின்ற ஆடவர்கள் சில பேர், நாங்கள் இங்கே வசிக்க மாட்டோம், நாங்கள் பக்கத்திலே உள்ள மலைப் பகுதிக்குச் சென்று விடுவோம் என்று ரேஷன் கார்டுகளையெல்லாம் கூட தூக்கி எறிந்து விட்டுப் போய் விட்டார்கள் என்று செய்தி வந்தது.

அது அவர்களுடைய கோபத்தினுடைய அடையாளம் என்று நாம் கருதிக் கொள்ள வேண்டுமே அல்லாமல் அவர்கள் உள்ளபடியே ஜாதி வேண்டுமென்று விரும்புகின்றவர்கள் என்று கருத முடியாது, எண்ண முடியாது, நினைக்க முடியாது. அவர்கள் மலைப் பகுதியிலே வாழப் போகிறோம் என்று சொல்லி விட்டுப் போனாலும் கூட,

அந்த வீட்டுப் பெண்மணிகள் யாரும் செல்லவில்லை என்றும் அவர்கள் எல்லாம் அங்கேயேதான் தங்கியிருக் கிறார்கள் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் எனக்கு சற்று முன்புகூட செய்தி சொன்னார். பரவாயில்லை, தமிழ்நாட்டில் பெண்கள் முன்னேறி யிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

அந்தக் காலத்திலிருந்து பெரியாரும், அண்ணாவும் மற்றும் பல தலைவர்களும் பட்டபாட்டின் விளைவாக பெண்கள் முன்னேறி யிருக்கிறார்கள். ஆண்களும் நிச்சயமாக முன்னேறுவார்கள் என்ற அந்த நம்பிக்கையோடு அங்கே அமைதி காக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறேன். பாதுகாப்புக்கு சுவர் மாத்திர மல்ல, இன்னும் பாதுகாப்பு தேவை என்று உயர்வர்க்கத்தார் என்று கருதிக் கொண்டிருப் பவர்கள் சொல்வார்களேயானால், நான் அவர் களுக்கு சொல்வேன், இன்னும் சில மாதங்களுக்கு போதிய பாதுகாப்பு அளிக்கக் கூடிய அளவிற்கு இராணுவம் வேண்டுமானாலும் அங்கே வரவழைத்துத் தருகிறேன் – மத்திய அரசுக்கு எழுதி வரவழைத்து இராணுவத்தை வேண்டுமானாலும் அங்கே வைப்போம் –

அதைவிட, "இராணுவத்தை வரவழைத்து விட்டாயா" என்று கேட்கின்ற ஒரு சுடு சொல்லை விட, ஒரு அவமானத்தை விட, இன்னும் ஜாதி இருக்கிறது என்று நாம் ஒத்துக் கொண்டால், அது பெரிய அவமானம் என்று நான் கருதுகிற காரணத்தினால்தான், ஜாதிக் கொடுமை – ஜாதியினால் ஏற்படுகின்ற வேற்றுமை – சாதியினால் ஏற்படுகின்ற பிளவுகள், மோதுதல்கள், அதனால் வழிகின்ற ரத்தம், இவைகள் எல்லாம் நம்முடைய ரத்தம்தான், நம்முடைய உயிர் தான், நம்முடைய மக்கள்தான்

பாதிக்கப்படுகிறார்கள் என்பதை எண்ணி அமைதிப் பூங்காவாக தமிழகம் மீண்டும் மலருவதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே நண்பர் துரைராஜ் கூட சில அரசியல் கட்சிக் காரர்கள் இதைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்று சொன்னார். அரசியல் கட்சி என்றால் எதையும் பயன்படுத்திக் கொள்ளத் தான் வரும். அதில் தவறு ஒன்றுமில்லை. எந்தக் கட்சியாக இருந்தாலும் ஒரு சம்பவம் ஏற்பட்டால், அந்தச் சம்பவத்தைப் பயன்படுத்திக் கொண்டு தாங்கள் வளரத் தான் எண்ணுவார்கள். அதில் தவறு ஒன்றுமில்லை. அதை நான் தவறாக நினைக்கவும் இல்லை என்பதை எடுத்துக் கூறி எப்படியோ, இதுவரையிலே சமத்துவம் இல்லாமல் இருந்த ஒரு நிலை மாறி சமத்துவ நிலை அங்கே ஏற்பட்டதற்காக அந்த ஊருக்கு இருந்த உத்தபுரம் என்ற பெயரைக் கூட – உத்தமபுரம் என்று இனிமேல் நாம் அழைக்கலாம் என்ற உணர்வோடு அந்த ஊர் மக்களை எல்லாம் உங்களோடு சேர்ந்து வாழ்த்துகிறேன், வணக்கம்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

பேரவையில் தோழமைக்கட்சியினரின் பாராட்டுக்கு நன்றி தெரிவித்து முதல்வர் கலைஞர் உருக்கமிகு உரை

சட்டப் பேரவையில் 13.5.2008 அன்று கழக அரசின் இரண்டாண்டு சாதனைகளுக்காகவும் மூன்றாம் ஆண்டு தொடங்குவதையொட்டியும் முதல்வர் கலைஞர் அவர்களைப் பாராட்டி, அனைத்துக் கட்சித் தலைவர்கள் பேசினர்.

இதற்கு நன்றி தெரிவித்து முதல்வர் கலைஞர் அவர்கள் உருக்கமிகு உரை நிகழ்த்தினார்.

தமது உரையில் :–

“மக்களுக்கு தொண்டாற்ற வேண்டும் என்பதால், அதற்கேற்ப என் உடல் வளத்தை சரியாக வைத்துக்கொள்ள முயற்சிக்கிறேன். அப்படி தொண்டாற்றுகிற காலத்தில் எல்லோ ரோடும் தோழமையோடு பழகினோம் என்பதே என் ஆசை” எனக் குறிப்பிட்ட முதல்வர் கலைஞர் அவர்கள் “எல்லோரும் ஒருவரை ஒருவர் மதிக்கவும், மனிதாபிமானத்தோடு பழகுங்கள். நாட்டை, சமுதாயத்தை வளம்பெறச் செய்ய இணைந்து பாடுபடுவோம். அதுவே நான் ஆற்றுகிற தொண்டுக்கு நீங்கள் காட்டும் நன்றியாகும்” எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

கழக அரசின் இரண்டாண்டு கால சாதனைகள் முடிந்து மூன்றாம் ஆண்டு தொடக்கத்தை முன்னிட்டு சட்டப் பேரவையில் நேற்று பீட்டர் அல்போன்ஸ் (காங்கிரஸ்),

கோ.க. மணி (பா.ம.க.), சி.கோவிந்தசாமி (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்), வை.சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்), ரவிக்குமார் (விடுதலைச் சிறுத்தைகள்) ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

இதனைத் தொடர்ந்து முதல்வர் கலைஞர் அவர்கள் நன்றி தெரிவித்து உரையாற்ற எழுந்து நின்றதும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று மேஜையைத் தட்டி மகிழ்ச்சி தெரிவித்தனர்.

தொடர்ந்து முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

பக்கத்திலே இருக்கின்ற பேராசிரியர் அவர்கள் உட்கார்ந்தே உரையாற்றச் சொன்னார். நன்றி கூறும் பொழுது அது மரியாதை அல்ல என்பதற்காக எழுந்து நின்று நாகரிகமாகப் பேசுகின்றேன். அது மாத்திரமல்ல, "எழுந்து நிற்கவும் முடியும்" என்பதையும் எடுத்துக் காட்டுவதற்காகவும் எழுந்து நின்று பேசுகின்றேன்.

இதே மாமன்றத்தில் என்னுடைய சட்டமன்ற வாழ்க்கையைப் பற்றி எத்தனை ஆண்டு காலம் அந்த சட்டமன்ற வாழ்க்கை தொடர்ந்தது என்பதைப் பற்றி நீங்களும் தேசத் தலைவர்கள் பலரும், நாட்டுத் தலைவர்களும், புலவர் பெருமக்களும், அறிஞர் பெருமக்களும், ஆன்றோர்களும், சான்றோர்களும், இந்த அவையிலே என்னை வாழ்த்தியிருக்கின்றார்கள்.

ஆட்சியை சிலாகித்து வாழ்த்திய உங்களுக்கும், இன்னும் நூறு ஆண்டுகள் வரையிலே வாழ வேண்டும் என்று "சாபம்"(?) கொடுத்த நண்பர்களுக்கும் நான் எப்படி

நன்றி சொல்வது என்றே எனக்குப் புரியவில்லை. ஏனென்றால், இயற்கை எந்த அளவிற்கு இடம் தருகிறதோ, அந்த அளவிற்கு வாழ எல்லோரும் முயற்சிப்பார்கள். அப்படி முயற்சிக்கின்ற நேரத்தில் எந்த நிலையிலே தன்னுடைய உடலைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் – நலம் பேண வேண்டும் என்பதை யெல்லாம் சிந்தித்து அதற்கேற்ப வழிவகைகளையும் ஏற்றுக் கொண்டு வாழ்க்கை நடத்துவார்கள்.

என்னைப் பொறுத்த வரையில், ஒரு ஐம்பதாண்டு காலத்திற்குப் பிறகு அல்லது அறுபது வயதிற்குப் பிறகு நீண்ட நாள் வாழ வேண்டுமென்ற ஆசை வந்துவிட்டது. ஏனென்றால், எஞ்சியுள்ள நாட்கள் குறைவாக இருந்தால், மக்களுக்குத் தொண்டாற்றக் கூடிய நாட்கள் குறைந்து விடுமே என்ற அந்தக் கவலையால் நான் நீண்ட நாள் வாழ வேண்டுமென்று ஆசைப்பட்டதும், ஆசைப்படுவதும் உண்மை. அதற்கேற்ப என்னுடைய உடல் வளத்தை சரியாக வைத்துக் கொள்ள மேலும் மேலும் முயற்சிக்கிறேன். விடியற்காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுகிறேன் – இப்படிச் சொல் வதற்குக் காரணம் – இவன் எப்படி உழைக்கிறான் இவ்வளவு வயதிலே என்று யாராவது வியப்புற்றால், அவர்கள் வாலிபர்களாக இருந்தால், நடுத்தர வயதுடையவர்களாக இருந்தால், அவர்கள் எல்லாம் இப்படிப் பழகிக் கொள்ள வேண்டுமென்று நான் அவர்களுக்கு வைக்கின்ற வேண்டுகோள்தான் இது.

இன்றைக்கு காலையிலே நான்கு மணிக்கு எழுந்து – நடைபயிற்சியை முடித்து விட்டு – கடலூர் மகளிர் மாநாட்டிற்கான கவிதை ஒன்றை எழுதி விட்டு – அதற்குப்

பிறகுதான் அவைக்கு வருவதற்கான அலுவல் களைக் கவனித்து இங்கே வந்திருக்கிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம் – என்னுடைய் ஒரு நாள் வேலை இப்படி என்று "ஜம்பம்" அடித்துக் கொள் வதற்காக அல்ல. இப்படி வேலை செய்தால் தான் நீண்ட நாள் வாழ்வதற்கு வழி உண்டு என்பதை உங்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டுமென்ற பொது நல நோக்கத்தோடு அதைக் குறிப்பிடுகிறேனே அல்லாமல், எனக்காக அல்ல. மேலும் மேலும் தொடர்ந்து தொண்டாற்ற வேண்டும் என்கிற நேரத்தில் அப்படி தொண்டாற்றுகின்ற காலகட்டத்தில் எல்லோரோடும் தோழமையோடு பழகினோம் என்ற திருப்தியோடுதான் மறைய வேண்டும் என்பது இப்போதெல்லாம் என் நெஞ்சிலே மலர்ந்து வருகின்ற மகத்தான ஆசையாகும்.

நேற்றையதினம் நடைபெற்ற காவல் துறை மானியத்திலே கூட என்னுடைய பேச்சு அமைந்த விதத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தலைவர்கள், தோழமைக் கட்சி நண்பர்கள் அனைவரும் கவனித்திருப்பீர்கள். அது யாரையும் வசியப்படுத்திக் கொள்ள வேண்டும், நம் பக்கம் இழுத்துக் கொள்ள வேண்டுமென்கிற முயற்சியல்ல. எல்லோரும் இணைந்து இந்த நாட்டை, இந்தச் சமுதாயத்தை ஒற்றுமைப்படுத்தி வாழ வைக்க, வளம் பெறச் செய்ய நம் அத்தனை பேருடைய முயற்சியும் ஒருமித்த நிலையிலே இருந்திட வேண்டும். கொஞ்சம் "பிசிறு" தட்டினால் கூட எப்படி சங்கீதம் கெட்டு விடு கிறதோ, கொஞ்சம் தாளம் தவறினால் கூட, எப்படி நடனம் பாழாகி விடு கிறதோ அதைப்போல நம்முடைய ஒற்றுமையில், நம்முடைய தோழமை உணர்வில் – தோழமை உணர்வென்று கூட்டுச் சேர்ந்துள்ள தோழமைக் கட்சிகளை

மாத்திரம் சொல்லவில்லை. கூட்டுச் சேராத காலத்தில் – கூட்டாக இருந்த – இன்றைய எதிர்க்கட்சிக்காரர்களையும் சேர்த்துத் தான் சொல்கிறேன். எல்லோரும் அதே உணர்வோடு பழகவும் – பொது வாழ்க்கையிலே ஈடுபடவும் – ஒருவரையொருவர் மதிக்கவும் – ஒருவரை யொருவர் நேசிக்கவும் – மனிதாபிமானத்தோடு பழகவும் – மனித நேயத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்கவும் வேண்டுமென்பதுதான் நான் உங்களுக்கெல்லாம் வைக்கின்ற வேண்டுகோள். அந்த வேண்டுகோளை நீங்கள் காப்பாற்றுவீர்கள் என்று நம்புகின்றேன்.

ஒருவேளை நான் நீங்கள் விரும்புகின்ற நாள் வரையிலே இல்லாமல் இடையில் உங்களிடமிருந்து பிரிந்து விட்டாலும், இன்றைக்கு இந்த மன்றத்திலிருந்து மாபெரும் தலைவர்கள் எல்லாம் படங்களாக இருக்கின்ற இந்த மன்றத்திலிருந்து சொல்லுகின்ற இந்த வாசகங்களை நீங்கள் மனதிலே பதிய வைத்து – யாரோ ஒரு பெரியவன் சொன்ன கட்டளை என்று கருத வேண்டாம் – ஒரு சிறியவன் விடுத்த "கெஞ்சல்" என்கின்ற முறையிலே இவைகளை யெல்லாம் ஏற்றுக் கொண்டு அத்தகைய வாழ்க்கையை நீங்கள் வாழ்ந்து காட்டி, இந்தத் தமிழகத்தை, தமிழ் இனத்தை வாழ வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது தான் நீங்கள் எனக்குக் காட்டுகின்ற – இத்தனை நாள் நான் ஆற்றிய தொண்டு, பணி என்று நீங்கள் நம்பினால் – அதற்கு நீங்கள் காட்டுகின்ற நன்றி என்று கூறி அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

குற்றஞ் சாட்டப்பட்டவருக்காக துணைபோவது– ஆதரவளிப்பது பெருங்குற்றம்; தவறு செய்தவர்கள் மன்னிக்கப்படமாட்டார்கள்!

சட்டப்பேரவையில் முதல்வர் கலைஞர் அறிவிப்பு

அமைச்சர் பூங்கோதை ராஜினாமா பற்றி ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்றும், தொலைபேசி ஒட்டுக் கேட்பு எப்படி நடைபெறுகிறதென்று உளவுத்துறை மூலம் ஆராய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்காக துணை போவது, ஆதரவளிப்பது பெருங்குற்றம் – தவறு செய்தவர்கள் மன்னிக்கப்பட மாட்டார்கள் என்றும் முதல்வர் கலைஞர் அவர்கள் நேற்று சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

சட்டப் பேரவையில் 14.5.2008 அன்று முதல்வர் கலைஞர் அவர்கள் 110 வது விதியின் கீழ் அறிக்கை ஒன்றினை படித்தார். இதனை அடுத்து எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஓ.பன்னீர் செல்வம் எழுந்து கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு செய்தித்தாள்களில் வெளியான தொலைபேசி ஒட்டுக்கேட்பு பிரச்சினை குறித்து பேசினார்.

இதற்கு பதிலளித்து முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அமைதியான முறையில் இந்த அவையிலே எடுத்து வைக்க வேண்டிய ஒரு கருத்தை

எடுத்து வைத்திருக்கின்றார்கள். அதற்காக நான் அவரைப் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க்கட்சியினுடைய பணி எதுவோ அந்தப் பணியை நிறைவேற்ற வேண்டுமென்ற கடமை உணர்ச்சியோடு அவர்கள் அந்தப் பணியை இப்போது நிறைவேற்றியிருக்கிறார்கள். "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பாரிலானுங் கெடும்" என்றான் வள்ளுவன். இடித்துச் சொல்லக் கூடிய எதிர்த் தரப்பிலே உள்ளவர்கள் இல்லாவிட்டால் அந்த அரசு தன்னை யாரும் கெடுப்பதற்கு முன் வராமலே தானே கெட்டு விடும் என்பது வள்ளுவனுடைய வாக்கு. அந்த வாக்கிற்கேற்ப இடித்துச் சொல்லுகின்ற அந்தப் பொறுப்பை நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் ஏற்று தன்னுடைய கடமையை ஆற்றியிருக்கின்றார். அதற்கு அவருடைய பாணியிலேயே – அதாவது அவருடைய பாணி என்றால் – அமைதியான முறையிலே நான் விளக்கம் அளிக்க விரும்புகின்றேன்.

ஏற்கனவே, ஒட்டுக் கேட்ட ஒரு விவகாரம் நாட்டிலே, பத்திரிக்கைகளிலே விளம்பரப்படுத்தப்பட்டு அது சட்டமன்றம் வரையிலே எதிரொலித்து, அதற்கொரு விசாரணைக் குழுவை நீதியரசர் சண்முகம் அவர்களுடைய தலைமையிலே நாம் உருவாக்கியிருக்கிறோம். அது தன்னுடைய பணியினை ஆரம்பித்திருக்கின்றது. முதலில் வந்த தகவல், தலைமைச் செயலாளரும் இன்னொரு அதிகாரியும் பேசிக் கொண்டிருந்தது பதிவாகியிருக்கிறது என்பதாகும். ஒருவர் பேசுவதை இன்னொருவர் கேட்பது, பதிவு செய்வது விஞ்ஞானம் வளர்ந்திருக்கின்ற இந்தக்

காலகட்டத்தில் மிகச் சுலபமாக ஆகி விட்டது. நம்முடைய கையிலே வைத்திருக்கின்ற செல்போனை வைத்துக் கூட தற்போது போட்டோ எடுக்க முடிகிறது. நமக்கு பக்கத்திலே இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்தால் அவர்கள் அறியாமல் அதைப் படம் எடுத்துக் கொள்ளலாம் என்ற அளவிற்கு விஞ்ஞான வளர்ச்சி இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. அது நாமெல்லாம் அன்றாடம் காணுகின்ற ஒரு நடைமுறையாகவும் ஆகிவிட்டிருக்கிறது.

ஆனால், விசாரணைக் குழுவிற்கு விடப்பட்டிருக்கின்ற முதல் வழக்கு – தலைமைச் செயலாளரும் ஒரு அதிகாரியும் பேசிக் கொண்டதாகப் பதிவான ஒரு ஒட்டுக் கேட்பு நிகழ்ச்சியின் விசாரணை முடியவில்லை – விசாரணைக்கு நியமிக்கப்பட்ட நீதியரசர் அந்தப் பணிகளை தொடங்கி நடந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் இடையிலே இப்படி ஒரு செய்தி வந்திருப்பது நான் உள்ளபடியே வருந்துகின்ற ஒன்றாகும். இந்தச் செய்தி வந்ததற்குக் காரணமாக இருந்த ஒருவர் நம்முடைய அமைச்சர் பெருமக்களிலே ஒருவர் என்கின்ற நேரத்தில் நான் மேலும் வேதனைப்படுகின்றேன். அதற்கான விளக்கத்தை இங்கே நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல அளிப்பதற்கு முன்பு அதையும் இந்த விசாரணைக் கமிஷனோடு சேர்த்துச் செய்யலாம் என்று நாங்கள் சிந்தித்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன்பே, அந்த அம்மையார் தன்னுடைய ராஜினாமாவை எழுதி அனுப்பியிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்

கொள்கிறேன். அதைத் தான் இங்கே கேட்டார்கள் – அந்தப் பேச்சில் நான் இப்போது அதைப்பற்றிச் சொன்னால் முன்கூட்டியே விசாரணை முடிவை அறிவித்து விட்டதாக ஆகி விடும். இரண்டு விஷயங் களையும் சொல்கிறேன் – முதல் விவகாரத்தில் இரண்டு பேர் பேசியதில் எந்தவிதமான ரகசியங்களும் இல்லை, தேசத் துரோகமான அல்லது நாட்டுத் துரோகமான அல்லது அரசுக்கு விரோதமான எந்த விஷயங்களும் முதல் விவகாரத்திலே பேசவில்லை. ஆனால் இந்த விவகாரத்தில் லஞ்சம் வாங்கிய தன்னுடைய சொந்தக்காரர் ஒருவரைப் பாதுகாக்கின்ற முயற்சி – அமைச்சர் ஒருவரால் செய்யப்பட்டிருக்கிறது என்பது நான் வெட்கப்பட வேண்டிய ஒன்றாகும். நான் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. நான் வெட்கப் படுகிறேன் அதற்காக. அந்த அம்மையாரும் தான் செய்த தவறை உணர்ந்து எனக்கு எழுதிய கடிதத்தில் "எனது உறவினர் ஜவகர் மீது நடைபெற்று வரும் விசாரணையின் போக்கில் குறுக்கிட்டு அமைச்சர் என்ற முறையில் எனது செல்வாக்கை அல்லது அதிகாரத்தைச் செலுத்த வேண்டும் என்ற உள்நோக்கம் கிஞ்சிற்றும் எனக்குக் கிடையாதென்றாலும், விஜிலன்ஸ் டைரக்டருடன் பேசிய போது ஜவகர் தொடர்பான விஷயத்தை ஒரு கோரிக்கை என்ற முறையில் பரிசீலிக்கச் சொன்னேன். எனினும் அப்படிச் செய்ததைக் கூட தவறு என்று இப்போது உணருகிறேன். அதற்குப் பரிகாரமாக எனது அமைச்சர் பொறுப்பை ராஜினாமா செய்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார்.

அமைச்சர் ராஜினாமா செய்தது குறித்து நான் எந்த முடிவையும் எடுக்கவில்லை. அதைப் பற்றி கலந்தாலோசித்துக் கொண்டிருக்கிறேன். அது ஆய்வில் இருக்கிறது. இதில் முடிவெடுக்கின்ற அதே நேரத்தில், எப்படி இந்த டேப் விவகாரம், ஒட்டுக் கேட்கின்ற விவகாரம் நடைபெறுகிறது என்பதை ஆராய அத்தகைய வேகமானப் பணிகளை நம்முடைய துப்பறியும் இலாகா மூலமாக செய்திட – அந்த விசாரணையும் மேற்கொள்ளவேண்டி யிருக்கின்றது.

அடுத்து இது தொடர்பாக இன்னொரு விசாரணைக்குழுவையும் – அல்லது இதே விசாரணைக் குழு இதையும் இணைத்து விசாரிக்கலாமா என்பதையும் யோசித்து நடவடிக்கை எடுக்கப்படும். தவறு செய்தவர்கள் யாரும் மன்னிக்கப்பட மாட்டார்கள். அதிலும் லஞ்சம் வாங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்காக துணை போவதோ, ஆதரவளிப்பதோ, பெரும் குற்றம் என்பதை நானும்; நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உணர்வதைப் போல உணருகிறேன் என்பதை எடுத்துச் சொல்லி, இந்த விவகாரத்தில் அடுத்து எடுக்கின்ற நடவடிக்கைகளை, அரசு அவ்வப்போது அறிவிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

B79222
கக 328.954 11
கலை ரா

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை


HANJIN